விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

**'விபரீதமாக எண்ணவேண்டாம்!'**
— அமெரிக்க அமைச்சர்

(சென்னை)

''இலங்கைக்கு நாங்கள் சென்றது சாதாரண முறையில் தான். விபரீதமாக எண்ண வேண்டாம்,'' என்று இந்தியப்பிரதமர் இந்திரா காந்தியிடம் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஷுல்ஸ் தெரிவித்திருப்பதாக தெரிகிறது.

இவ்வாறு இ. தொ. காங்கிரஸின் தலைவர் திரு. சௌ. தொண்டமானின் அந்தரங்க செயலாளர் திரு. பி. தேவராஜன் சென்னையில் தமிழ் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.


# ஈழநாடு
THE EELANADU

வாரமலர்

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் : 25 ஐப்பசி 20 முஹரம் 30 இதழ் 265

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 6-11-83


**நேற்று மின்சார வெட்டு இல்லை!**

(கொழும்பு)

இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் மின்சார வெட்டு நேற்று அமுல்செய்யப்படவில்லை. நீர்த்தேக்கங்களில் கடும்மழை பெய்துவருவதினால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேசமயம் நடைமுறையிலிருக்கும் மின்சார வெட்டு எதிர்காலத்தில் படிப்படியாக நீக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

# இந்திராவின் சிறப்புப் பிரதிநிதி பார்த்தசாரதி இன்று வருகிறார்!

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நிரந்தரத் தீர்வுக்கான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கோடு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புப் பிரதிநிதி கோபாலசுவாமி பார்த்தசாரதி மீண்டும் இன்று இரவு கொழும்பு வருகிறார்!

இங்கு 3 நாட்கள் தங்கியிருந்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உட்பட அரசின் அமைச்சர்கள், மாற்றுக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்!

இந்திரா காந்தியின் சிறப்பு பிரதிநிதியாக இரண்டாவது தடவையாக இங்கு பார்த்தசாரதி வருகிறார். பம்பாயிலிருந்து விமானத்தில் புறப்பட்டுவரும் இவர் இங்கு இரவு 12 மணியளவில் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. ஜூலையில் நடந்த கலவரத்தினை அடுத்து ஆகஸ்ட் 24-ம் திகதி இந்திரா தனது பிரதிநிதியாக இவரை இங்கு அனுப்பி வைத்தார்! இலங்கைத் தமிழர் பிரச்னையில் நல்ல தீர்வு ஒன்றை ஏற்படுத்த அப்போது முயன்றார். ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன உட்பட அமைச்சர்கள் பலரையும் சந்தித்துப் பேசினார். இந்தியாவில் அப்போது தங்கியிருந்த திரு. அமிர்தலிங்கத்தையும் இங்கு அழைத்து, அவரோடும் பேசினார்! அதன் பின்னர் நாடு திரும்பிய பார்த்தசாரதியின் அடுத்த விஜயம் அடுத்த சில வாரங்களில்

[16-ம் பக்கம் பார்க்க]

## அகதிகள் புனர்வாழ்வு நிதியத்துக்கு 89 ஆயிரம்!

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிதியத்துக்கு, கூட்டுறவுச் சங்கங்களின் அகதிகள் புனர்வாழ்வுக்குழு 89,374 ரூபா 90 சதத்தை கையளித்துள்ளது

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து யாழ். ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா அகதிகள் புனர்வாழ்வு நிதியப் பொருளாளர் திரு. ஜே. எம். சபாரத்தினத்திடம் இந்

(16ம் பக்கம் பார்க்க)

## டில்லியில் இந்திராவுடன் ஜனாதிபதி பேசுவார்!

[நமது நிருபர்]

இம்மாதம் 22ம் திகதி டில்லியில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்திக்குமிடையில் உயர் மட்டப் பேச்சுவார்த்தை நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

காமன் வெல்த்தலைவர்கள் மாநாடு 23ம் திகதி டில்லியில் நடக்கவுள்ளது, 23திகதி முதல் 30ம் திகதி இம்மகாநாடு நடைபெறும்.

இதில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தன

[16ம் பக்கம் பார்க்க]

## சீன, அமெரிக்க பிரதிநிதிகள் இலங்கை வருகிறார்கள்!

(கொழும்பு)

சீனாவின் உதவி வெளி நாட்டமைச்சர் திரு.கொங்டாப்பே நான்கு நாள் விஜயமாக மாலைதீவு செல்லும் வழியில் இன்று இலங்கை வருகின்றார்!

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

(16-ம் பக்கம் பார்க்க)

# விடுதலையான டாக்டர் தர்மர் நேற்று யாழ். வந்துசேர்ந்தார்!

(ஏ. வி. மாணிக்கம்
இரா. துரைரத்தினம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, கடந்த நான்கு மாதங்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் ஏஸ். ஏ. தர்மலிங்கம் விடுதலை செய்யப்பட்டு நேற்று பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள வீட்டுக்கு வந்துசேர்ந்தார்.

74 வயதுள்ள டாக்டர் தர்மலிங்கம். அவரது இல்லத்துக்கு கொண்டு வரப்பட்டபோது வழக்கமாக அணிந்திருக்கும் வெள்ளை நாஸனலும், வேட்டியுடனும் காணப்பட்டார். முகத்தில் தாடிவளர்ந்திருந்தது.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் தர்மலிங்கமும், அணியின்செயலாளர் கோவை மகேசனும் கைது செய்யப்பட்டு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் வெலிக்கடைச்சிறைச் சாலையில் இருந்து பாதுகாப்பு கருதி மட்டக்களப்பு சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டனர்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருக்கும்பொழுதே இருதய நோயால் பாதிக்கப்பட்ட டாக்டர். மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலுள்ள தீவிரகண் காணிப்புப் பிரிவில் சிகிச்சை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் டாக்டர் தர்மலிங்கம் விடுதலை செய்யப்பட்டிருந்தபோதும், நேற்றுக் காலை 6-30 மணிக்கு மட்டக்களப்பு பொலிசார், ஜீப் ஒன்றில் யாழ்ப்பாணம் கொண்டு வந்து யாழ். சிறைச்சாலை அதி

[16ம் பக்கம் பார்க்க]


வியாபாரிகட்கும்,
ப. நோ. கூ. சங்கங்கட்கும்

**ஓர் நற்செய்தி!**

எங்களிடம்
லக்ஸ்பிறே, யானை தீப்பெட்டி, நெஸ்லே
பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு
எங்களிடம் வாங்கும் உள்ளூர் விலை பொருட்களில்
விசேட கழிவுகளும் - சலுகைகளும்
வழங்கப்படும்.

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

எஸ். வி. முருகேசு,
நம்: 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 22564.
(9479)




# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அரியாலை கண்டிவீதிக்கு அருகாமையில் அத்திவாரம் கிணற்றுடன் 7 பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது. விபரங்களுக்கு கீழ்வரும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும், 111/4, Convent Rd, Jaffna. 9591

வழி உத்தரவுப் பத்திரத்துடன், யாழ்ப்பாணம்-கொழும்பு 51 பிரயாணிகள் ஏற்றிச் செல்லும் நல்லநிலையிலுள்ள 29 ஸ்ரீ 4000 வரிசை இசுசு பஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: 109, சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 9651

யாழ் நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம் S. S அபூபக்கர் அன்கோ, 112, கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா, ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவனியா, 9506

தெல்லிப்பளையில் துர்க்கை அம்மன் கோவிலிருந்து 500 மீற்-சந்தியிலிருந்து 500மீற்றர் தூரத்தில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. ஸ்ரீரஜனி C/o சச்சிதானந்தம் - கி. சே. (உடுவில் மகளிர் பாடசாலை அருகாமை) உடுவில். 9714

குடத்தனை தபால் கந்தோருக்கு எதிரில் 4 பரப்பு வீடு கட்டக்கூடிய காணியும் ½மைல் தூரத்தில் 2½ஏக்கர் பனங் காணியும் விற்பனைக்கு உள்ளன. விபரங்களுக்கு: த. உருத்திரா ஆதவன் மில்ஸ், 6, பிரதான வீதி, பருத்தித்துறை, 9665

இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட, பெரிய கார்கள் மூடக்கூடிய மெழுகுசீலை-விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க; ராமதாஸ், Front Lane, பலாலி ரோட், திருநெல்வேலி. தொலைபேசி;24090. 9684

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர்வீதியில்மின்சாரவசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு; ஆ. குமாரசாமி, ''ஜெயகிரி'' 1ம் ஒழுங்கை, உரும்பராய் தெற்கு. 9693

Datsun Sunny B 310 12 Sri (Dark green) குளிரூட்டி, வெல்வெற் சீற்றுடன் விற்பனைக்குண்டு. காலை-8 மாலை -4 மணிவரை பார்வையிடலாம். 6, கைலாச பிள்ளையார் கோவில்வீதி, நல்லூர். 9700

தொண்டமானறு சந்திக்கு அண்மையில் 4½ பரப்புவெறுங் காணிவிற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு;K சங்கர், AD41 தொண்டமானறு. 9695

சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு எதிரில் தளபாடங்களுடன் வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு, 15, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 9721

யாழ்ப்பாணம்-கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில், சுமார் 150 யார் உள்ளே காணி, 8 பரப்பு பெரிய கடைக்கு சமீபம். தொடர்பு கொள்ளவும். திருமதி குருசாமி, 48, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி அல்லது தில்லையம்பலம், 21, சீனிவாசகம் வீதி, கொட்டடி. 9623

## விற்பனைக்கு

நீர்வேலி கரந்தனில் வீதியருகே 29 பரப்பு கிணற்றுடன் நிந்தமான தோட்டக்காணி வீடமைக்க இடத்துடன் விற்பனைக்குண்டு. முந்திரிகைக்கும் உகந்தது. தொடர்பு: திருமதி திருராஜா புன்னாலைக்கட்டுவன் -வடக்கு. 9696

ELF 250 28 ஸ்ரீ 1884இலக்க லொறி (பின்னுக்கு இரட்டை சில்லு) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு S சாரங்கபாணி. குருந்தட்டி, நெல்லியடி, கரவெட்டி. 9643

நவாலி அரசடி, தம்பையா பண்டிதர் வீதியில் வீடுகள் கட்டுவதற்குகந்த 14 7/8 பரப்புக்காணி மின்சார வசதியுடனுண்டு. தொடர்புகொள்ளவும். சிவசுப்பிரமணியம், 'சிவசக்தி' நவாலி தெற்கு, மானிப்பாய். 9679

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில், இலங்கை வங்கிக்கு அருகாமையில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 109, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 9636

நல்ல நிலையிலுள்ள றிச்சாட் பீரிஸ் கொம்பனித் தயாரிப்பு 250 இரும்புக் கதிரைகள் விற்பனைக்குண்டு. கடிதமூலம் விண்ணப்பிக்கவும், விளம்பர இல: 9663 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9663

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பிரதான வீதியில் ஒரு புதிய மேசைப் பட்டடை கடையுடன் விற்பனைக்குண்டு. விளம்பர இல: 9675 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 9675

பருத்தித்துறை கடற்கரை வீதியில் வெளிச்ச வீட்டுக்கு முன்னால் இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தென்னை, பனை, புளி மரங்கள் உண்டு. மின்சாரவசதி உண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்) தொடர்பு: அருளம்பலம், மாளிகை வளவு, தபாற்கந்தோர் முன்பாக சாவகச்சேரி, அல்லது ந. கிருஷ்ணபிள்ளை உலாந்தா 23 கடற்கரை வீதி, பருத்தித்துறை. 9642

## FOR SALE

House and Property —Furniture and Effects (Opposit Chundikuli Girls' College) Contact: 15, Colombogam Road, Jaffna. 9720

## வாடகைக்கு

கட்டிட ஒப்பந்தகாரர்கள், பொறியியல் ஆலோசகர்கள், கணக்காளர்கள் முதலீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றுக்குரிய கந்தோர் இடமுண்டு முற்பணம் வேண்டும். தொடர்பு: ஐயனார்ற்றேடர்ஸ், 133/7, கே. கே. எஸ். வீதி, சீமெயஸ்கே மில்லடி, யாழ்ப்பாணம். 9668

திருமண வைபவங்களுக்கும் மற்றும் விசேஷங்களுக்கும் றிச்சாட் பீரிஸ் கொம்பனித் தயாரிப்பினால் செய்யப்பட்ட இரும்புக்கதிரைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: கலா கிறைண்டிங் மில், திருநெல்வேலி சந்தி திருநெல்வேலி அல்லது S. கனகலிங்கம் C/o நாகராஜா மாஸ்ரர் முருகன் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 9664

## பயிற்சி

Computer Programming' ரெலிவிசன் வீடியோ டெக்நிப்பியறிங், எலக்ரிக்கல், வயறிங், எயர்கொண்டிசனிங், Hotel Management, வெல்டிங், French பயிற்சிகள் ஆரம்பம் 14-11-83 (சகல பயிற்சிகளிற்கும் இரண்டுமாத செய்முறை பயிற்சியளிக்கப்படும்) விபரங்கட்கு The School of computer Studies, கனகரத்தினம் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவைக்கு அருகாமை), யாழ்ப்பாணம். 9653

## தேவை

பளைப் பகுதியில்(நல்ல நிலையில்) தென்னந்தோட்டம் தேவை தொடர்பு கொள்ளவும். அ. கந்தசாமி, 22 சிவன் கோயில் ரோட், திருநெல்வேலி தெற்கு யாழ்ப்பாணம். 9694

சிறிய கோழிக்குஞ்சு பொரிக்கும் யந்திரம் (Incubater) தேவை. தொடர்பு Mrs R புவனேஸ்வரி, 204 கஸ்தூரியார் ரோட் யாழ்ப்பாணம். 9697

எமது ஸ்தாபனத்திற்கு மொணிற்றஸ் கொப்பிகள் கட்டுவதில் அனுபவம் உள்ள பெண்களும் ஸ்ரிச்சிங் மெசினில் (Stiching Machine) வேலை செய்யக் கூடிய பெண் ஒருவரும் உடன் தேவை. விண்ணப்பிக்கவும். Globe Industries, 163, Hospital Road, Jaffna. 9683

மரக்கடைச்சலில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. துண்டுக்கணக்கில் வேலை, நிரந்தர வேலை கொடுக்கப்படும் தங்கும் வசதி உண்டு. பாலாஸ் குருப், 14 பிரதான வீதி செங்கலடி(மட்டக்களப்பு) தொலை 065-2390. 9703

மணமகள் தேவை:- யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்து வேளாள மணமகனுக்கு தாயார், மணமகள் தேடுகிறார். மணமகனுக்கு 12-ல் செவ்வாயுண்டு வயது 45. குடிப்பழக்கமற்ற நல்ல குணமுடையவர். பெருந்தொகையான நிலபுலன்களுக்குரியவர். மணப்பெண் 38 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் அவசியம். முழுவிபரங்களையும் ஜாதகப் பிரதியுடன் தொடர்பு கொள்ளவும் தகவல்கள் அனைத்தும் இரகசியமாக வைக்கப்படும் விண்ணப்பம். விளம்பர இல; 9706 மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம். 9706

செவ்வாய் தோஷமுள்ள 28 வயது நிரம்பிய அழகும் பண்பும் நிரம்பிய 5 1/2 அடி உயரமுள்ளவரும் மாதம் ரூபா 1000/- வருமானம் உள்ள இந்து வேளாள குலப் பெண்ணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. பொறியியல் பட்டம்பெற்று அல்லது வேறு நல்ல உயர்ந்த பதவியில் உத்தியோகம் புரிபவர்கள் விரும்பப்படுவர் வீடு, நகை காணியும் காசும் சீதனமாக உண்டு. சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும் விளமபர இல: 9699 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 9699

மணமகன் தேவை, யாழ்ப்பாண உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த நைஜீரியாவில் உயர் அதிகாரியாக கடமை ஆற்றுபவர் தன்னுடைய அழகிய நற்குணமுள்ள படித்த சகோதரிக்கு 36 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட உயர்குல வேளாள மணமகனை விரும்புகிறார். ஆசிரியர் அரசாங்க உத்தியோகஸ்தர், தனியார் துறையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு வளவு, பணம், நகை கொடுக்கப்படும் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9692 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் 9692

## WANTED

Internal Auditor age 36 twelve years experience in State Corporation and private sector seeks suitable employment in Jaffna. Assistant manager / Accountant in Finance Company prefered security / deposit available if required. Please reply Advt. No: 9656, C/o Eelanadu Ltd., Jaffna. 9656

Wanted immediately Registered Medical Practitioner for the Co-operative Hospital, Kayts (Sinna Moolai) Salary negotiable. Apply with your bio-data to the ''President, M. P. C. S. Ltd., Kayts'' on or before 12-11-83. (9719)

## ஸ்கந்த சஷ்டி

(யாழ்ப்பாணம்)

இன்று வண்ணை - ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் காலை ஸ்நபனாபிஷேகமும் பூஜையும் தொடர்ந்து திருச்செந்தூர் புராணபடனமும் மாலை சந்தனக் காப்புச் சாத்தப்பெற்ற செந்தில் கதிர்வேலவனுக்கு நியாச பூர்வ ஷண்முகார்ச்சனையும் வசந்த மண்டப பூஜையும் பெருமான் உள்வீதி வலம்வருதலும் நடைபெறும்.

கட்டைவேலி

நெல்லியடி

ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

கட்டைவேலி - நெல்லியடி ப நோ. கூ. சங்கத்தில் 15,000 வரையிலான சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன ரூபா 25/- மீளளிக்கப்படாதகட்டணமாகச்செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திய ரூபா 100/-க்குரிய பற்றுச்சீட்டு இலக்கத்தையும் குறிப்பிட்டு 10-11-83க்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலம் 'பொதுமுகாமையாளர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி' என்னும் முகவரிக்கு அனுப்புதல்வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும்தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்குக்கான கேள்வி' எனக் குறிப்பிட்டிருத்தல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி,
19-10-83. 9519

## சதுரங்கப் போட்டி

(CHESS TOURNAMENT)

பணப் பரிசுகள் ரூபா 1250/-

விண்ணப்ப முடிவு: 1983-11-18

மேலதிக விபரங்களுக்கு:

செயலாளர்,
வடஇலங்கைச் சதுரங்கக் கழகம்,
(NORTHERN CHESS CLUB)
784, பலாலி வீதி, — திருநெல்வேலி.

(9715)

## வாடகைக்கு அல்லது விலைக்கு தேவை வீடும், நிலமும்.

இலங்கை மின்சார சபையின் யாழ். நகர டிப்போவுக்கு, யாழ். மாநகர, பிரதான எல்லைக்குள் அரச பணிக்கு உகந்த சுற்றுடலில் 1500—2500 சதுர அடிஉள்ள கட்டிடத்துடன் சுமார் 4 பரப்பு உள்ள காணி வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை. கட்டிட/காணி சொந்தக்காரர்கள் தாங்கள் எதிர் பார்க்கும் வாடகை அல்லது விலையுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். வெறும் காணி விற்க விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

முகவரி: மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்,
இ. மி. ச. சுன்னாகம்.

9704

புதிய ஆங்கில வகுப்புகள்

## BASIC & Intermediate ENGLISH CLASSES

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்கட்கும் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன.

ஆரம்பம்: 9-11-83 காலை 9-00 மணி

15 2/4, மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

வரையறுக்கப்பட்ட
அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்

## சட்ட ஆலோசனைக் குழு

கடந்த ஆடி மாதம் நடந்த இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்கவும், தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஒரு குழு வரையறுக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் உதவி தேவைப்படுவோர் கழகச் செயலாளருடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி :
66, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

3-11-83 9702

# வார மலர்

ஈழநாடு

EELANADU VARAMALAR


## வாழும் நெறி வகுத்துக் காட்டி வாழ்க

ஈழ நாடு வார ஏடு மீண்டும் இன்று வந்ததே
ஈழ மக்கள் பெற்ற இன்புக் கெல்லே என்ப
[தில்லேயே
நாளும் வைய மக்க ளுக்கு நன்று தீது
[சொல்லியே
வாழும் நெறியை வகுத்துக் காட்டி வாழ்க
[என்றும் வாழ்கவே

**புலவர்மணி வே. கனகசபாபதி**

# பார்த்தசாரதி விஜயம் இம்முறை பயன்தருமா?

பாரதத்தின் தூதுவர் பார்த்தசாரதியின் இலங்கை விஜயம் இம்முறை பூரண பயனே அளிக்குமென்றே நம்புவோம்.

கடந்தமுறை அவர் இங்கு வந்து தமிழர் பிரச்னேகள் தொடர்பாக ஜனுதிபதி, முக்கிய அமைச்சர்கள், தமிழர்



தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபோதிலும் 'சிக்கு'கள் அவிழ்படாத நிலேயில் பாரதம் திரும்பினுர்.

மீண்டும் இங்கு வருமாறு ஜனுதிபதி திரு. ஜயவர்த்தனு அவரை அழைத்துள்ளார். நல்லதொரு திட்டமின்றி ஜனுதிபதி அவரை இங்கு அழைத்திருக்க முடியாது. முந்திய விஜயத்தின் போது பல நாட்கள் இந்தியத் தூதர் இங்கு தங்கிப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதால் அதன் அடிப்படையிலேயே இம்முறையும் பிரச்னேகள் அணுகப்படலாமென்று நம்புவதற்கு இடமுண்டு.

வியட்நாமில், வங்காள தேசத்தில்...... மற்றும் எங்கெல்லாம் பிரச்னேகள் இடம் பெற்றனவோ அங்கெல்லாம் சமாதானம் நிலவ வழிகண்ட பார்த்தசாரதியை இலங்கைக்கும் அனுப்புவதற்கு இந்தியப் பிரதமர் அன்னே இந்திரா முடிவு செய்தபோது ஈழத்துத் தமிழர் மட்டுமன்றி சகல உலகமுமே எதிர்பார்த்தது ஒரு நல்ல தீர்வை. ஆனுல் துரதிர்ஷ்டவசமாகப் பேச்சுவார்த்தை பின்போடப்பட்டது.

அவரது பேச்சுக்கள் குறித்து உடனுக்குடன் அறிந்துகொண்டிருந்த அப்போதைய எமது எதிர்க்கட்சி முதல்வர் அமிர்தலிங்கம்கூட அவரது முயற்சியில் அப்போது நம்பிக்கை கொண்டிருந்தது எம்மெல்லோருக்கும் பூரிப்பை ஏற்படுத்தியிருந்தது.

முதற்கட்டப் பேச்சுக்கள் முடிந்து நாடு திரும்பியபோது இரு வாரத்தில் மீண்டும் இங்கு வரவிருப்பதாகக் கூறப்பட்டது. ஜனுதிபதி ஜயவர்த்தனுவின் வேண்டுகோளின்பேரில் அவரது விஜயம் பின்னர் ரத்துச்செய்யப்பட்டபோது அமிர்தலிங்கம் மட்டுமன்றி இந்தியத் தலேவர்களே அவரது முயசியில் நம்பிக்கை இழந்தனர்.

''பார்த்தசாரதியின் விஜயம் பயனற்றுவிட்டது.''

''பார்த்தசாரதியுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு தயங்குகிறது.''

— என்றெல்லாம் குரல்கள் ஒலித்தன.

ஆனுல் இன்று - அவரது விஜயத்திற்குத் தமது கதவுகளேத் தற்காலிகமாக மூடிய ஜனுதிபதியே வழி திறந்திருப்பது தமிழர் மத்தியில் நம்பிக்கை ஒளி ஊட்டியுள்ளது.

பார்த்தசாரதியின் முதல்

(14-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் வார மலர்

மீண்டும் 'ஈழநாடு' வாரமலர் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. ஏறத்தாழ இரண்டரைஆண்டுகள் வாரமலர் வெளியிட முடியாதநிலேமை ஏற்பட்டது துரதிருஷ்டமாகும்.

எப்பொழுது மீண்டும் வாரமலர் வெளியிடப்போகிறீர்கள் என்று வாசகர்களும் எமது வழமையான எழுத்தாளர்களும் அடிக்கடி விசாரித்தபடி இருந்தார்கள். எங்கே வாரமலர் வாரமலே போய் விடுமோ என்றும் கூடச்சிலர் ஐயப்பட்டனர்.

'ஈழநாடு' ஆரம்பமானதே வரமலராகத்தானே.

வாரமலர் நின்றுபோன சூழ்நிலேயை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

இருபத்துமூன்று ஆண்டு காலம் எதிர்நீச்சல் போட்டு முன்னேறி புதிய சகாப்தத்தில் அடியெடுத்து வைக்கத் திட்டங்கள் தீட்டிச் செயலுருக் கொடுக்கும் முயற்சியைத் தொடங்கவிருந்த வேளேயில் 'ஈழநாடு' விபத்துக்குள்ளானது.

எனினும் அடுத்த நான்கே தினங்களில் 'ஈழநாடு' மீண்டும் மக்கள் கையில் திகழ்ந்தது. அது அவர்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் தந்தது.

ஆனுல் வாரமலர் வெளிவராதது குறித்து வாசகர்களும் அபிமானிகளும் கொண்டிருந்த கவலே இன்றுடன் முற்றுப்பெறும் என்று கருதுகிறேம்.

இப்பணி தொடர்ந்தும் நடை பெற, இறைவன் அருளும் மக்கள் ஆதரவும் என்றும் போல் இருந்து வரும் என்று நம்புவோம்.

**பி. எஸ். பி.**


# நம்பினுல் நம்புங்கள்!




## வரண்ட பிரதேசமான வட பிராந்தியத்தில் ஏக்கருக்கு 4,900 தேங்காய்களேச் சேகரிக்கும் விவசாயி குட்டி தம்பி.

சராசரி 30-40 அங்குல மழை பெய்யும் இடப்பரப்பில் சிரத்தையாக பவர்ஸ் விசேட உரத்தினேப் பாவிப்பதனுல் நம்பவே முடியாத அளவு அதிக விளேச்சல் ஏற்படுகின்றது.

கிரமமான திட்டமிட்ட பவர்ஸ் விசேட உரப் பாவனேயே இது போன்ற விளேச்சலேத்தரும். 80 வருடங்களாக உர வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பவர்ஸ், விசேட தேவைகளுக்குரிய விசேட உரக் கலவையினைத் தருவதில் நிகரற்றவர்கள்.

**நீங்களும் நம்புங்கள்! - பவர்ஸ் மாத்திரமே ஒப்பற்றது என்பதனே!**

மேலதிக விபரங்களுக்கும் ஆலோசனேகளுக்கும், முகாமையாளர்.

**ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்**

5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலேபேசி: 7651, 7156.

மெற்றிக் அந்தர் ரூபா. 2905/-

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

வஞ்சகர் உறவு தங்களைச் சஞ்சலத்தில் மாட்டிவைக்கும். எக்கருமத்திலும் மனவெறுப்பும் இனசனப் பகைமையுமுண்டாம். 9ம், 10ம் திகதிகளில் தங்களுக்குப் புத்திரர் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் உண்டு. **விசேஷ தினங்கள்.** மாதுருவழித் தனவரவுக்கு இடமுண்டு. கல்வித்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும்.

## ரிஷபம்

கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்குக் கனகுஷியான வாரம். சிலருக்குத் திருமணங்களும் இடம்பெற இடமுண்டு. அதிகாரக்குறைவுண்டு. ஆத்திரம் அபாயத்தையுண்டுபண்ணும். மக்களின் மகிழ்ச்சி மனையை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தும். அவ்வழிப் பெருமைக்கும் இடமுண்டு.

## மிதுனம்

கெட்டபெயர் எட்டிப்பார்க்கும். குடும்பத்தில் பூசல்கள் தோன்றக்கூடும். ஆதரித்தவர்களே காலை வாரவும் கூடும். எச்சந்தர்ப்பத்திலும் அவசரப் போக்கைத் தவிர்த்துக்கொள்ளவும். 9, 10ம் திகதிகள் காதலர்களுக்குக் கனிவான வாரம். காதல் அரும்பு தலைதூக்கும். கனநாள் எண்ணம் ஈடேற இடமுண்டு.

## கடகம்

பெரியோரின் புகழ்ச்சிக்கு இடமுண்டு. இதயத்திற்கு இதம் தரும் செய்தி கிடைக்கலாம். அந்நியர் சகவாசம் ஆபத்தில் மாட்டலாம். அவசரமுடிவைத் தவிர்க்கவும். அடக்கம்வேண்டும்.. பிரிந்தவர் இணைவர். குடும்ப வழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். இல்லம் இன்ப வெள்ளம். 11ம், 12ம் திகதிகள் சுபநாட்கள்.

## சிம்மம்

தொழில் விஷயங்கள் சிறக்கும். இடப்பிரிவை நாடி மனம் பறக்கும். பதவி உயர்வுக்கும் இடமுண்டு. சிலரின் நட்பு பொருளைத்தேடிதரும், பெரியோரின் புகழ்ச்சி ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தும். பெருமையுடன் தலைநிமிர்ந்து நடப்பீர். பகைவர் பதுங்குவர். பாதையில் பள்ளம் உண்டு பார்த்து நடக்கவும். கொட்டத்தை அடக்க சிலர் திட்டம் தீட்டுவர்.

## கன்னி

செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். தொழில் துறையில் நல்லவருமானம் உண்டு. தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். இல்லத்தில் இனிமை தவழும். முதியவர் ஒருவர் உங்களுக்கு தக்க சமயத்தில் உதவுவார்.

## துலாம்

கருடப்பார்வை உங்களை வட்டமிடும். பகைவர் காத்திருப்பர். இருள் சூழ்ந்தநிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம். பொருள் வரவு, உபசாரம், பொழுது போக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும். தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் தென்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். முன்னேற்றமான வாரம்.

## விருச்சிகம்

ஏமாற்றுவேலை இடம் பெறும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். குடும்பத்தில் அமைதி குன்றும். சிந்தனையில் தடுமாற்றம் தென்படும். நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். முன் யோசனையுடன் நடக்கவும். பண நிலைமை ஸ்திரமாக இருக்கும். பெற்றோரின் அன்பு அவசியம் கிடைக்கும். சினிமா தொழிலில் ஈடுபடுபவர்களுக்குச் சிறப்பானவாரம்.

## தனுசு

குடும்பவாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். பூமியால் அதிகலாபம் கிடைப்பதற்கு இடமுண்டு. மண வாழ்க்கையில் நன்மையான மாற்றங்கள் உருவாகும். வேண்டாத் தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். உடல்நலம் பாதிக்கப்படலாம்.

## மகரம்

அதிகபேச்சைத் தவிர்த்துக் கொள்ளவும். பூமிப்பிணக்கினால் வழக்கு, விவகாரங்களுக்கும் இடமுண்டு. சொற்சிலம்பம் ஆடுவதில் முன்னணியில் நிற்பீர். சொகுசான வாழ்வுக்கு இடமுண்டு. பிறரின் மதிப்பிற்கு இலக்காவீர். அரசியல் வாதிகளுக்கு இவ்வாரம்

[14ம் பக்கம் பார்க்க]

**திருமதி.க.வேலுப்பிள்ளை**


# பவர்ஸ் உரம்

வெல்ல முடியாதது

MASTERS ABC 4/82 (D)

ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

மக்கள் சேவைக்கு மறுபெயரான—

# மல்ரி சேவிசஸ்

இப்பொழுது இரு பிரிவுகளாக இயங்குகிறது

### மல்ரி ஷொப்

- நவீன வீட்டுப் பாவனைப் பொருட்களும், விளையாட்டுச் சாமான்களும்.
- பிளாஸ்ரிக் சாமான்களும், மின் உபகரணங்கள், அலங்காரப் பொருட்கள்.
- ரி.வி., றேடியோ, றெக்கோடேர்ஸ், மணிக்கூடு வகைகள்.
- ரெருசோ தள அமைப்பு ஏற்பாடுகள்.

நம்பகரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள—

**மல்ரி சேவிசஸ்**
**மல்ரி ஷொப்**

த டன்லப் ஸ்ரோர்ஸ்,
234 (446) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23541

### மல்ரி சேவிசஸ்

- தமிழ் ஆங்கிலத் தட்டச்சு, ரோணியோ வேலைகளும் சகல விதமான செயலகச் சேவைகளும்.
- தொலைபேசி சுத்தப்படுத்தும் சேவை.
- மணமகன் / மணமகள் தொடர்பான திருமண சேவை.
- அஞ்சல்வழி ஆங்கிலக் கல்விச் சேவை.
- காணி, வீடுவளவு சம்பந்தப்பட்ட தரகுமுகவர் சேவை.
- பயண ஆலோசகர்களும் வரவேற்பு உபசார அமைப்பாளர்களும்.

தரமான சேவைகள்—
குறைவான கட்டணங்கள்.

தொடர்பு கொள்ளுங்கள் :

**மல்ரி சேவிசஸ்**

37 (351) மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

9669

# UNIIFO யூனிபோ

தளபாடங்கள் செய்யும் உருக்கு பைப்புகளை (Steel tubes) எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

3/4'' உருளை 20 அடி நீளம் 100/-
5/8'' உருளை 20 அடி நீளம் 90/-
1'' சதுரம் 20 அடி நீளம் 200/-

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு

தேவைகளுக்கு இன்றே விண்ணப்பிக்கவும்.

**ஐக்கிய குடும்பங்கள் கைத்தொழில் நிறுவனம்**

பலாலி வீதி, உரும்பராய்.

மும்ஸாக் மாளிகை, 11-C, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23720 யாழ்ப்பாணம்.

# வடக்கே வராது மகாவலி!

இலங்கையின் மாபெரும் அபிவிருத்தித்திட்டமென மகாவலிகங்கையை வடக்கே திருப்புதல் கூறப்படுகிறது. உண்மையில் இத்திட்டத்தின் செயற்பாட்டையும் அதனால் வரவிருக்கும் விளைவுகளையும் பார்க்கும்போது இம்மாபெருந்திட்டத்தின் வியத்தகு நடவடிக்கைகள் இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு மாற்றுமுனையாக அமையுய் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில்-

(1) மகாவலி ஆற்றுக்குக் குறுக்கே அணைகள் கட்டப்பட்டுப் பெரும் நீர்த்தேக்கம், கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. பொல்கொல்லை நீர்த்தேக்கம் போவத்தன்ன நீர்தேக்கம், மதுறுஓயா நீர்த்தேக்கம், மொறக்கந்த நீர்த்தேக்கம் என்பன கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. விக்ரோறியா நீர்த்தேக்கம், றந்தெனிகல நீர்த்தேக்கம் றன்தெம்பை நீர்தேக்கம், கொத்மடி நீர்த்தேக்கம் என்பன கட்டப்பட்டு வருகின்றன, இவையாவும் கட்டிமுடிக்கப்பட்டதும் இன்று இலங்கையில் நீர்ப்பாசனம் பெறுகின்ற அதேயளவு நெல் விளைநிலங்கள் அளவிற்கு, மகாவலி நீர்ப் பாய்ச்சும். ஏறத்தாழ ஒன்பது இலட்சம் ஏக்கர் புதிய விளைநிலம் இதனால் பெறப்படும். உணவில் தன்னிறைவு அடைய வாய்ப்புண்டு.

(2) இந்நீர்த்தேக்கங்கள் நீர்ப்பாசனத்திற்கு மட்டும் உரியனவல்ல. இவற்றில் நீர்மின் உற்பத்தியும் செய்யலாம். உக்குவெல, லெண்டோர், மொறக்கந்த, விக்டோறியா, றன்தெனிகல, கொத்மலி ஆகியன நீர்மின்வலு உற்பத்தி நிலையங்களாக்க உள்ளன. இருநூறு கோடி கிலோவாட் நீர் மின்சாரம் இவற்றிலிருந்து கிடைக்கவுள்ளது.

(3) இத்திட்டப்பிரதேசத்தில் பத்துலட்சம் மக்கள் குடியேற்றப்படவிருக்கின்றனர். வடமத்திய மாகாணத்திலும் மதுறு ஓயாப்பிரதேசத்திலும் குடியேற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பிரதேசங்களில் கைத்தொழில்கள், செம்பனை போன்ற புதிய பயிர்கள், பாதைகள் புதிய புகையிரதப்பாதை என்பன அமைக்கப்படவிருக்கின்றன.

இவை மகாவலிபாய் பிரதேசத்தினை வளமாக்கி அதனால் இலங்கையின் பொருளாதாரத்தையும் வளமாக்கும் என்பதில் சந்தேகமில்லை.


எமது சந்தேகம் என்னவெனில்-

மகாவலி நீர் வடக்கே வருமா என்பதுதான். மகாவலித் திட்டம் வகுக்கப்பட்ட காலத்திலிருந்து, சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னிருந்து மகாவலி வடக்கே வரும் என்ற நம்பிக்கை தரப்பட்டது. உண்மையில் ஆரம்பத்தில் மகாவலித் திட்டம் வகுக்கப்பட்டபோது, பொல்கொல்லையிலிருந்து வடக்கே ஒரு கால்வாய் மூலம் மகாவலி நீர் திருப்பப்படும். அந்த நீர் குருலுவீவாக் குளத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் அங்கிருந்து பதவியாக்குளத்திற்கு எடுத்து வரப்படும். பதவியாக்குளத்திலிருந்து வவுனியாவிலுள்ள சேமமடுக் குளத்திற்குக் கொண்டு வரப்படும். கனகராயன் ஆறு சேமமடுக்குளத்தில்தான் ஆரம்பமாகின்றது. அதனால் மகாவலி நீர் கனகராயன் ஆற்றின் ஊடாக கனகராயன்குளம், இரணைமடுக்குளம் என்பவற்றிற்குக் கொண்டு வரப்படும்' எனத்திட்டம் வகுக்கப்பட்டது.

இரணைமடுக்குளத்திற்கு வற்றால் பதவியாவிருந்து இரணைமடுவரை நீர்ப்பஞ்சம் இருக்காது. என்பதால், முப்போகம் நம்பிக்கையாக நெல் செய்யலாம் என வடபகுதி விவசாயிகள் கனவு கண்டனர். யாழ்ப்பாணக் கடல்நீரேரிநன்னீராக்கப்பட்டால் (அப்படி ஒரு திட்டம் உண்டு) அதனூடாகத் தொண்டமானாறுவரை மாகவலி நீர் வரும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. ஆனால் நடந்ததோ?..

மகாவலித்திட்டம் 1977 இல் துரித மாகவலித்திட்டமாக வகுக்கப்பட்ட போது, பழைய திட்டங்களுடன் மதுறுஓயாத் திட்டம் என்ற ஒரு திட்டமும் புகுத்தப்பட்டது. அது மாத்திரமன்றி மதுறுஓயாத்திட்டமே முதற் செயற்றிட்டமாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. மாகவலிகங்கை வருடாவருடம் கடலில் கலங்கும் அறுபது இலட்சம் ஏக்கரடி நீரைக் கணக்கிட்டுப் பகிர்ந்துதான் முதலில் திட்டம் உருவாக்கப்பட்டது. பின்னர் மதுறுஓயாத்திட்டம் சேர்க்கப்பட்டதால், வடக்கே வரவேண்டிய நீர், இனி வரமுடியாத நிலை உருவாகிவிட்டது. மதுறுஓயாத்திட்டம், வடக்கே வரவேண்டிய நீரைத் தானேஇன்று எடுத்துக் கொண்டது. எனவே-

வடக்கே மகாவலி வருமா என்றகேள்விக்கு 'வராது' என்றே பதில் சொல்லவேண்டியிருக்கிறது. ஏனேனில் மகாவலி நீர் உள்ள திட்டங்களுக்குத்தான் போதுமானதாக இருக்க, வடக்கே எப்படி மகாவலிவரும்?




சகடயோகி

---

தமிழகத்தில் அண்மையில் மிகவும் பிரபலமான கவிதைத் தொகுதி ஈழத்து இளங் கவிஞர் சேரனின் 'இரண்டாவது சூரிய உதயம்'' தொகுதியாகும்.
மறைந்த கவிஞர் மஹாகவியின் மகனான சேரன் 'கவியரசன்' என்ற புனைபெயரிலும் எழுதி வருகிறார். இவருடைய பிரபலமான கவிதையான 'இரண்டாவது சூரியஉதயம்' 1981ல் யாழ். நகர் எரியூட்டப்பட்ட நாட்களில் எழுதப்பட்டதாகும். இந்நாட்களிலேயே யாழ். பொது நூலகமும் 'ஈழநாடு'ம் எரிக்கப்பட்டன.

# இரண்டாவது சூரியஉதயம்

அன்றைக்குக் காற்றே இல்லை;
அலைகளும் எழாது செத்துப் போயிற்று
கடல்.

மணலில் கால் புதைதல் என
நடந்து வருகையில்
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.

இம்முறை தெற்கிலே —

என்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது;
எனது மக்கள் முகங்களை இழந்தனர்,
எனது நிலம் எனது காற்று
எல்லாவற்றிலும்
அந்நியப் பதிவு.

கைகளைப் பின்புறம் இறுகக்கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்கள் மீது
நெருப்பு,

தன் சேதியை எழுதியாயிற்று
இனியும் யார் காத்துள்ளனர்?
சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து
எழுந்து வருக.

சேரன்

சன்யோ - சொனி - நஷனல் - பிலிப்ஸ் கறுப்பு - வெள்ளை
கலர் ரெலிவிஷன்கள்
ரூபா 2500/- முதல் ரூபா 14,500/- வரை.
இறக்குமதி செய்யப்பட்ட பூஸ்டர்கள்
ரூபா 250/- முதல் ரூபா 700/- வரை
அன்ரனா வகைகள்
ரூபா 100/- முதல் ரூபா 875 வரை
மற்றும் றேடியோ, மணிக்கூடுகள் பல அன்பளிப்புப் பொருட்களுக்கும்
குறைந்த செலவில் நிலையான தெளிவான
அன்ரனா அமைப்பிற்கு முன்னோடிகள்
நியூ சிற்றி றேடர்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24055

சகல புதிய தமிழ்ப்பட வெளியீடுகளை வீடியோவில் பார்த்து மகிழ்வதற்கு சிற்றி வீடியோ கிளப்பில் அங்கத்துவம் பெறுங்கள்.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ரஸ்ற் ட்ரவல் சேர்விஸ்
11/A மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி ரூேட்,
யாழ். நகர்
T. P. 24111
தலைமைக்கந்தோர்
65, சதாம் வீதி
ஹைதிராமணி ஆர்காட்,
கொழும்பு-1.
உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம். அதுவே எங்கள் ஸ்தாபனத்தின் பெயருமாகும்.
- ஏரோபுளட், செக் கோசிலவேக்கியாவிமானக் கம்பனிகளின் பிரதான ஏஜன்டுகளாக இருப்பதனால் குறைந்த செலவுடன் விமான டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பிராக், பெல்ஜியம் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- குறைந்த கொமிஷனில் ரவலர்ஸ் செக் செய்து தரப்படும்.
- அதிகப்படியான மத்திய கிழக்கு டிக்கட்டுக்களில் 13½% கழிவு தரப்படும்.

● ஒரு கதை

# பிரெளணியும் ரேஸ்ஸியும்

பிரெளணி இப்போதெல்லாம் பெரிதாகி தாயின் அளவுக்கு வளர்ந்துவிட்டது. வர்க்கவேறுபாடு ஒன்றைத் தவிர மற்றப்படி தோற்றத்தில் அவையிரண்டுக்கும் வெகுஒற்றுமை. அடுத்தடுத்த விடுகளில் அவை காவல் செய்துவந்தன. பிரெளணியின் உடன் பிறப்பான பிளாக்கி சற்றே தொலைவில் வளர்ந்து வருகிறது. தாய்க்குப் பெயர் ரேஸ்ஸி.

பிரெளணியையும் பிளாக்கியையும் பிரசவித்துக் கொண்டு வீட்டுத் தாழ்வாரத்து மூலையிலே ரேஸ்ஸிகிடக்கின்றவேளை, அப்பப்பா யாரும் கிட்டப்போய்விட முடியுமா? வீட்டுக்காரர்கூட சிறிது எச்சரிக்கையுடன் தான் நடந்து கொண்டனர், பக்கத்து வீட்டுப்பாலு ஆசையை அடக்க முடியாதவனக ஒரு சமயம் பிரெளணியைத்தூக்கப் போய்ப்பட்ட பாடு. ஆனாலும் பிரெளணிக்கு இப்போது எஜமான் பாலுதான்.

பிரெளணி அடுத்த வீட்டில் வளர்ந்துவந்த போதிலும் நாளின் பெரும் பகுதியையும் தாயுடனேயே கழித்துவந்தது. எந்நேரமும் அது தாயுடன் விளையாடிக் கொண்டிருக்கும். வாலைக்குழைத்துக் கொண்டு ஒன்றையொன்று தழுவிப்புரளுவதும், ஒன்றைமற்றது துரத்தியபடி வீட்டைச் சுற்றி ஓடித்திரிவதும், வேடிக்கையாகக் கடிபட்டுக் கொள்வதும், வேற்று நாய்களைச் சேர்ந்தாற்போல் பாய்ந்து துரத்துவதும்...இப்படியே இவற்றையெல்லாம் உற்றுக் கவனித்தவர்கள் ரேஸ்ஸி-பிரெளணி தாய் பிள்ளைப்பாசத்தை அவதானித்திருப்பர்.

ஆனல் அன்று ரேஸ்ஸி நடந்துகொண்டவிதம் பார்ப்பவருக்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் கவலையையும் தருவதாயிருந்தது. பாலு மட்டும் எப்படிச் சகித்துக் கொள்வானே? பின்னேரமானதும் அவன் பெற்ருேருடன் வீடுதிரும்பி விடுவான். அதிகாலையில் தொலைவிலுள்ள உறவினர் வீட்டுக்குத் தீபாவளி கொண்டாடப் பாலுவும் பெற்ருேரும் வீட்டோடு போயிருந்தனர். அவன் வீடு சேர்ந்ததும் பிரெளணி தன் ஒடிந்த காலைத் தூக்கியவாறு வாலை ஆட்டியபடி எம்பித் தாவி அவன் கைகளை நக்கி நக்கி முத்தமிடும். தன் பிள்ளைமீது இத்தனை பற்றும் பாசமும் வைத்திருந்த ஒரு தாயே பிள்ளையை இப்படிக் கொடுமைப்படுத்திஞள் என்பதை பிரெளணி சொல்லி பாலு விளங்கிக் கொள்ளப் போகின்ருனு?

அன்று மத்தியானம் பிரெளணிக்குக் கடுமையான பசி. வீட்டாரில்லை. என்ருலும் தாயுடன் வழமைபோல் விளையாடிக்கொண்டிருந்ததால் பசியைச் சற்றேனும் மறக்க முடிந்திருந்தது. ஆனாலும் ரேஸ்ஸியின் எஜமானி அதற்கென வைக்கப்பட்டிருந்த பீங்கானில் சோற்றைக் கொண்டு வந்து நிறைத்தபோது பிரெளணியின் பசி பொங்கிப் பிரவாகித்தது.

எஜமானி 'ரேஸ்ஸி' என்றழைத்த குரல் மறைவதற்குள் அவள் முன்னல் ரேஸ்ஸியை முந்தி நின்றது பிரெளணி

பாவம் பிரெளணி. பின்னல் நிகழவிருப்பதை அது அறிந்திருக்கவில்லை. தன் சோற்றுக் கோப்பையில் பிரெளணி வாய் வைத்தது தான், மூண்டது சண்டை!

(12-ம் பக்கம் பார்க்க)

● சசிபாரதி

# சிறுவர் நாம்

## சர்க்கஸில் லூசி

ஐ. பன்கின்

சர்க்கஸில் அக்பர் என்ருெரு புலி இருந்தது. அதன் இணையான எலோஞ திடீரென இறந்தபோது அக்பரின் துயரம் உச்சமடைந்தது. அது சாப்பிடவில்லை, சர்க்கஸ் விளையாட்டுகளில் ஈடுபடவுமில்லை. அதன் பயிற்சியாளர்கள்கூட அதனருகில் நெருங்க முடியவில்லை. இரவும் பகலும் அது கூண்டிற்குள் கர்ஜித்தவாறு அலை மோதிற்று. ஐந்தாவது நாள் வேலைக்காரன் கூச்சலிட்டான்.

''ஐயோ, புலி கதவை உடைக்கிறது. இதோ பாய்ந்து வெளியே வந்துவிட்டது.''

சன நடமாட்டமிக்க ஓரிடத்திலேயே சர்க்கஸ் கூடாரம் அமைந்திருந்தது. செய்திஅறிந்ததும் பயிற்சியாளரும் நானும் ஓடிச் சென்ருேம். நாங்கள் சென்றபோது அவ்விடம் வெறிச்சோடிப் போயிருந்தது. அக்பர் மட்டுமே அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. எதிர்பாராத விதமாக ஒரு சிறுமி ஐஸ்கிறீம் சாலையிலிருந்து வந்து கொண்டிருந்தாள். புலி அவளைக் கண்டுவிட்டு அவளை நோக்கி விரைந்தது.

''அக்பர் பின்னல் போ'' நாங்கள் கத்திஞேம்.

ஆனல் அந்த விலங்கோ அதைக் கேட்கவில்லை. அந்தச் சிறுமியை நெருங்கிற்று. அது சிறுமியை அண்மித்ததுடன் அவள் தனது கைய்யுயர்த்தி புலியைத் தடவியவாறு அதன் கண்களைப் பார்த்தாள். அது சிறுமியை முகர்ந்து பார்த்த பின்னர், பின்னங்கால்களில் அமைதியாக அமர்ந்து கொண்டது.

பயிற்சியாளர் புலிக்கும் சிறுமிக்கும் இடையில் போய் நிற்கப் பார்த்தார். ஆனல் அக்பரோ மேலும் அவளைநெருங்கி தலையை அவளின் கரத்திற்கிடையே செலுத்திற்று.

''கொஞ்சம் பொறுங்கள்'' நான் கூறினேன் - ''பயப்பட ஏதுவுமில்லைபோல் படுகிறது. அக்பர் தனக்கு ஒரு துணையைத் தேடிக் கொண்டதைப் போலிருக்கிறது.''

''சரி அப்படியானல் அவளிடமிருந்து அதைப் பிரிப்பது கஷ்டம்தான்'' என்ருர் அவர்.

''உனது பெயரென்ன'' பயிற்சியாளர் சிறுமியைக் கேட்டார்.

''லூசி''

''லூசி உனக்கு இனிப்புப் பிடிக்குமா?''

''ஓ ... பிடிக்குமே''

''அப்படியானல் சர்க்கசுக்கு வா. அங்கே நிறையக் கற்கண்டு இருக்கிறது. மெல்ல மெல்லப் போகலாம் வா.''

சிறுமி நடந்தாள். அக்பர் பின்தொடர்ந்தது.

ஆனாலும் சர்க்கஸ் கூடாரத்திற்குள்ளும் சிறுமியைத் தனியாக்க முடியவில்லை. அக்பர் அவளை அகலவிடவில்லை. கூடியவரை அவளுடன் நெருங்கியே இருந்து கொண்டது. எனவே அதன் கூண்டிற்குள் சிறுமியையும் கூட்டிச் செல்லலானேம்.

''அதுதான் அக்பர் இருக்கும் கூண்டு'' -அக்பரை அவதானித்துக்கொண்டே லூசியிடம் கூறிஞேம். அது லூசியைத் தொடர்ந்து கூண்டிற்குள் போகுமோ, போகாதோ எனச் சந்தேகமாயிருந்தது.

ஆனல், அக்பர் கூண்டிற்குள் சென்றது. நாங்கள் சிறுமியுடன் வாசலுக்குவர எத்தனித்தபோது விழிப்புற்ற அக்பர் எம்மைப் பார்த்து உறுமிற்று. எனவே நிர்ப்பந்தமாகச் சிரித்துக் கொண்டே லூசிக்குக் கூறிஞேம்.

''நமது புலி விளையாட விரும்புகிறதில்லையா. லூசி நீ அக்பரை விரும்புகிருயா?''

''ஆமாம், விரும்புகிறேன்''

''சர்க்கஸை? இந்த இடம் பிடிக்கிறதா?''

''ஓ, இந்தஇடம்நன்ருயிருக்கிறது''

நாங்கள்கூண்டிற்குள் நீண்டநேரமாக இருந்து லூசியுடன் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் சிந்தையெல்லாம் புலியிடமிருந்து லூசியை எப்படி அப்புறப்படுத்துவதென்பதாகவே இருந்தது.''

ஈற்றில் பயிற்சியாளர் புன்னகையோடு கூறிஞர்: ''அரங்கைச்சுற்றி வேலியடைப்போம்'' அதன்பின் அவர் புலியைச் சிறுமியுடன் அரங்கிற்கு கூட்டி வந்தார். அக்பர் அன்றைக்குப் போல சந்தோஷமாக இருந்ததை நான் கண்டதேயில்லை. அது ஒரு சின்னக் குட்டியைப் போலவே குதியாட்டம் போட்டது. அதன் துள்ளலைக் கண்டு லூசியும் குதூகலித்து, கைகொட்டிச் சிரித்தவாறு அக்பரைத் தொடர்ந்து ஓடிஞள். ஏதும் விபரீதம் நடந்துவிடுமோமென ஜாக்கிரதையாகவே இருந்தோம். அப்படியேதும் நடக்கவில்லை.

போதியளவு விளையாடிய பின் அக்பர் தாஞகவே கூண்டிற்குட் சென்றது. அங்கே அதற்கான உணவு தயாராயிருந்தது. சாப்பிடும்போது அக்பர் எவரையும் - நண்பரைக் கூட - அருகில் அனுமதிக்காது, அது புலிகளின் குணம்.

எனவே ஒருவாருக இப்போது லூசி கூண்டிற்கு வெளியே இருக்க நேர்ந்தது.

அடுத்தநாளும் லூசியும் அக்பரும் சர்க்கஸ் அரங்கில் சந்தித்தார்கள். அன்றும் அக்பர் ஆனந்தமாகத் துள்ளிக்குதித்து விளையாடிற்று. தனது விளையாட்டுக்களையெல்லாம் அற்புதமாகச் செய்தது.

இப்போது புலிக்கான கட்டளைகளைப் பிறப்பிக்க லூசியைப் பயிற்றுவித்துக்கொண்டிருந்தோம்.

சில நாட்களுக்குள்ளேயே லூசி நாம் சொன்னபடி கட்டளைகளைப் பிறப்பிக்கலாஞள். சொன்னதையெல்லாம் அக்பர் செய்தது. அதன்பின் லூசியிடம் வந்து கரத்திற்கிடையே தலையை வைத்துக் கொண்டது.

காலம் சென்றது. ஒரு நாள் அழகான, அற்புதமான ஆடை அணிகளுடன் லூசி பொதுமக்கள் முன் தோன்றிஞள். அக்ப

(12-ம் பக்கம் பார்க்க)

## பாலர் நாங்கள் பாடுவோம்!

அழகிய சின்ன எறும்பே
அதிசயமான எறும்பே
உழைத்திட உன்போல் உலகில்
ஒருவரும் இல்லை எறும்பே

சுறுசுறுப்பாக இருப்பாய்
துளியும் சோர்ந்து விடாய் நீ
உறுதியும் முயற்சியும் உள்ள
உனக்கு நிகரே இல்லை

இனிப்புப் பொருளைக்கண்டால்
இச்சையாக உண்பாய்
இனிமையான எறும்பே
எனக்கும் இனிப்பு விருப்பம்

ஒன்றன் பின் ஒன்ருக
ஊர்ந்து நீங்கள் செல்ல
நன்ருய் இருக்கும் பார்க்க
நல்ல எறும்பே வாழ்க

- மாதவி
(9-ம் வகுப்பு
வேம்படி மகளிர் கல்லூரி)


உங்கள் பணத்திற்கு....
28% வட்டி...



சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

| காலம் | ரூபா 500/- — ரூபா 99,999/- | | ரூபா 100,000/- அதற்கு மேல் | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் | கால முதிர்வு | மாதம் | கால முதிர்வு |
| 3 மாதம் | — | 16% | — | 17% |
| 6 மாதம் | — | 17% | — | 19% |
| 12 மாதம் | 19% | 22% | 20% | 23% |
| 18 மாதம் | 20% | 23% | 21% | 24% |
| 24 மாதம் | 21% | 25% | 22% | 26% |
| 30 மாதம் | 22% | 26% | 23% | 27% |
| 36 மாதம் | 23% | 27% | 24% | 28% |

the maharaja organisation

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு


| | ரூ [illegible] அதிகமான வைப்புக்கு மாதாந்தம் வட்டி | காலமுதிர்வு வட்டி | 1 00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 22% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,050 | 250,000 | 250 000 |
| ஒதுக்கிய மூலதனம் | 142,588 | 246,815 | 1 706 147 |
| வைப்பு மூலதனம் | 3.579,820 | [illegible] | 12,139,162 |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | 181,611 | [illegible] | [illegible] |
| நிகரலாபம் (வரிகட்டிய பின) | 163,916 | 652,777 | 1 [illegible] |
| பங்குலாபம் | — | 250,000 | 187,000 |

இயக்குனர்கள்
1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என். குமாரசாமி, F.C.A (Eng. & Wales) ATII (Eng.) M. Inst A M (Eng.). AMBIM (Eng.). F.C A. (Cey)
4. திரு. பி. [illegible] B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LL.B (Lond) Hons. A B (Lond) சட்டத்தரணி
6. திரு. டி ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A. A.C.M.A
7. திரு. டபிள்யு. [illegible] MBIM (Eng.)
8. திரு. எ. குணசேகரா

வியாபார நோக்கங்கள்
★ முதலீட்டு வைப்பு
★ [illegible] இயந்திரங்கள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.
ஸ்தாபகம்: 29-09-1970.
[illegible]
காரியாலயம்: [illegible] வீதி கொழும்பு.




# வடு.....

செ. யோகநாதன்

மனம் எதிலுமே ஒட்ட மறுக்கின்றது.

அமைதியாகக் கொஞ்ச நேரத்துக்கு உட்கார்ந்திருக்கலாமென்று இங்கே வந்தால் மூளையைப் புரட்டிக் குத்துகின்ற ஆரவாரம் இதோ என் அயல் முழுவதுமே செறிந்து கனத்திருக்கின்றது. ஓங்கித் தலையுயர்த்தி அதே வேகத்திலே தலைகீழாக விழுந்து டொமார் டொமார் என முறிகின்ற கடல் அலைகள். வெளிறிப்போய் நீலங் கரைகின்ற வானம். சோகை பிடித்த பூவரச மரங்கள். காகக் கத்தலாய் குழம்பிக் கேட்கின்ற மனிதக் குரல்கள்...

மனம் இன்றையைப் போல எனக்குக் குழம்பியதில்லை. சில வேளை பல நாளைய நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான மனக் குலைவுகள் இன்று தனது உச்சக் கட்டத்தினை எய்தியிருக்கலாம். கொஞ்சம் நின்று கண்களைச் சுற்றிப் பாருங்கள். அமைதியையோ சந்தோஷத்தையோ தரிசிக்கக்கூடியதாக இருக்கின்றதா? அவசரம். பரபரபரப்பு. எதிரே தெரிகின்ற ஏதோ பயங்கரத்துக்காய் அஞ்சி வழிவிட்டு விலகி அவசர அவசரமாக ஓடித் தப்புகின்ற வேகம். வெளியுலகச் சூழலெல்லாம் மனிதனின் உள்ளுணர்வுகளை எவ்வளவு பூதாகரமாகப் பாதித்து அவனைக்கிலுகிலுக்க வைத்துவிடுகின்றன என்பதனை இந்த நாட்களிலே நான் அனுபவ ரீதியாக உணர்கின்றேன்.

வேணுகோபாலின் முடிவுசில வேளைகளில் என்னை இப்படி முற்றுகவே நிலைகுலையச் செய்திருக்கலாம். அதனுல்தான் காலையிலே நான் இவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொண்டிருக்கின்றேன். ஆனுலும் நினைத்துப் பார்க்கின்றபோது இந்த ஆத்திரத்திற்கும் ஆழமான காரணமிருந்தது. வேணுகோபாலன் சிறு குழந்தையல்ல. பதினெட்டு வயது இந்த மார்கழியோடு அவனுக்கு முடிகின்றது. நகரத்திலே பிரபல கல்லூரியில் படித்து வந்தான். விளையாட்டுத் துறையிலும் துலங்கினுன். 'கிரிக்கெட் மாச்'சுக்கு கப்டனுய் விளையாடிக் கொண்டிருந்தவன் இடைவேளையோடு காணுமல் போய்விட்டான். இரவு எட்டரை மணிபோல அவனுடைய அக்கா- எனது மனைவி பூமணி- திடீரென்று அழுத குரல் கேட்டது. அறைக்குள்ளே போனேன். கடிதத் துண்டு ஒன்றைக் கையில் வைத்தவாறு விசும்பிக் கொண்டிருந்தாள். ''என்னைத்தேடாதீர்கள்.

— வேணு''

என்ற வார்த்தைகள் என் பிடரியையும் மனதையும் மூர்க்கமாக அறைந்து தாக்கின. நிலைகுலைந்துபோய்விட்டேன். அவன் எங்கே போயிருக்கிருன் என்பதை உடனேயே யூகித்துக் கொண்டேன். மனதினை என்னவோ அமுத்திற்று.

பூமணி இரவு முழுவதும் அழுது கொண்டிருந்தாள்.

என்னுல் வேணுகோபாலனின் செய்கையினை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. ஆயினும் பின்னுேக்கி மனதைத் தள்ளிக் கொண்டு இறந்த காலத்தின் சின்னச் சின்ன நிகழ்ச்சிகளையெல்லாம் அலசியெடுத்துக் கண்களின் முன்னே கொண்டு வருகின்றபோது இவனின் செய்கைக்கான வேரினைக் கண்டுகொள்ள முடிகின்றது.

இவனுடைய சிநேகிதன் காந்தன் மிகவும் கெட்டிக்காரனுயிருந்தான். இரண்டுமுறை முயன்றும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாக முடியவில்லை. ராஜன் என்ற இன்னெருவன் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தான். கலகலப்பான இளைஞன். எந்த இயந்திரத்தையும் முதல் முறை பார்த்த கையோடேயே கழற்றிப் பூட்டிவிடுவான்- கொஞ்சமுமே பிசகில்லாமல். அதிகாலைப் பொழுதொன்றில் மூர்க்கத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டான். வேணுகோபாலன் அன்று தொட்டு சில நாட்களுக்கு வெறிபிடித்தவன் போலத் திரிந்தான். நேரத்துக்குச் சாப்பாடில்லை. நான் மெதுவான குரலிலே கொஞ்சம் அதட்டுகிற தொனியோடு அவனை அணுகினேன்.

''அதை இதை யோசியாமல் படிப்பிலை கவனம் வை.. வேணு..''

வேணு என்னைச் சோர்வு மிதக்கின்ற கண்களோடுபார்த்தான்.

''படிச்சுத்தான் என்னத்தை அத்தான் செய்கிறது? வாழ்க்கையே நிச்சயமில்லாத ஒன்ருய்ப் போச்சுது...''

என்மனம் திக்கென்றது. பதினெட்டு வயதின் அங்கலாய்ப்பு என்னை அடித்துநிறுத்தியது. என்னுலே எதுவும் சொல்ல முடியவில்லை. அவனுக்கும் எனக்கும் ஒரு தலைமுறைகால இடைவெளி என்பது வருஷங்களில் மட்டுமல்ல சிந்தனையில், அனுபவங்களில், நடைமுறைச் சிக்கல்களில், வாழ்க்கை நோக்குகளில்... இப்படி எல்லாவற்றிலுமே என்று அறிகின்றேன். எவ்வளவு இடைவெளி!

அவனது துண்டுக் கடிதம் அதை இறுக்கமாய் உணர்த்தி விட்டது.

எவ்வளவு இலேசாக எல்லா உறவுகளையும் தனையென எண்ணி அறுத்தெறிந்துவிட்டு வேணுகோபாலன் சர்வசாதாரணமாக வீட்டை விட்டுப் போய்விட்டான். முன்பென்ருல், கொழும்பிற்கு நான் போகப் புறப்படுகின்றபோது ஒப்பாரியொன்ருேடுதான் வீட்டை விட்டுப் பிரிவேன். கோழி இறகுக்குள் குஞ்சென வளர்ந்தோம். இப்போது எல்லாமே உடைந்து நொறுங்கிச் சிதறிப்போய் குஞ்சுகள் எல்லாம் எவ்விதம்... எவ்விதம்...

## எமது சிறுகதை

அதிகாலைவரை பூமணி திக்கித்துப்போய் நித்திரையில்லாமல் உட்கார்ந்திருந்தாள். மடியிலேயே ஆறு வயதுக் குழந்தை பாரதி பூங்கொத்தாய் உறங்கிக் கொண்டிருந்தாள். எவ்விதமான கவலையுமின்றி உறங்கிக் கொண்டிருக்கின்ற என் மகளின் நிர்மலமான முகத்தினைச் சில கணங்களுக்குப் பார்த்தேன். இது போன்ற முகப்பொலிவோடு இவள் வாழ்வு முழுவதும் விளங்கினுல் எவ்வளவு நன்ருக இருக்கும் அந்த நினைவோடேயே வேணுகோபாலனும் மனதிலே முகங்காட்டினுன். பாரதியைப் போலத்தான் இவனும் ஒரு கபடமறியாக் குழந்தையாய், சிறுமலராய் என் கண்ணெதிரிலேயேவளர்ந்தவன்..

காலையிலே எழுந்ததும் பாரதியைப் பார்த்தேன். நேற்றைய பதட்டங்கள் அவளது முகத்திலும் இலோசாகப் பூசியிருந்தன. நித்திரையால் மாமனை எழுப்பித்தேநீர் கொடுப்பது அவள்தான். மாமனைத் தேடினுள். காணவில்லை. தாயிடம் கேட்டாள். அவள் அதட்டவே சிணுங்கல் தொடங்கிற்று. அதிர்ந்து பேசாத தாய் மகளை உறுக்கவே சிணுங்கல், அழுகையாய் விரிந்தது. குழந்தைகள் அழுவதைக் கொஞ்ச நேரத்துக்குத்தான் தாங்கலாம் நான் சென்று மகளைத்தூக்கினேன். ஆறுதல் சொன்னேன். வாக்குறுதிகள்கூறினேன். சிணுங்கல் கொஞ்சமேனும் மங்கவில்லை. மெல்லவே தலையை வருடினேன். ஏதோ நினைத்துக் கொண்டவளாய் காதோடு கிசுகிசுத்தாள்.

''சுபாஷிணியின் அண்ணுவை ஜீப்பிலைவந்து கொண்டு போட்டாங்களாம்,, சுபா அழுதழுது சொன்னவள். மாமாவையும் அவங்களா கூட்டிக் கொண்டு போயிட்டாங்கள்? அவங்கள்மாமாவை அடிப்பாங்களா அப்பா?''

நான் விக்கித்துப்போனேன். ஆறுவயதான இவளுக்கு எவ்வளவு விஷயங்கள் தெரிந்து விட்டன. இனிமேல் பிறக்கின்ற குழந்தைகளே இவைகளையெல்லாம் உடனுடன் அறிந்துகொண்டுவிடுமென எண்ணினேன். மீண்டும் மகள் உலுப்பினுள்.

''இல்லை அப்படியில்லை.. மாமா வேறை இடத்தை போயிருக்கிருன்.. சுறுக்காகப்பிள்ளைக்கு சொக்காவும் கொண்டு வந்திடுவான் ... நீங்க அச்சாப் பிள்ளையாய்ப்போய் முகத்தைக் கழுவுங்கோ...''

எனது ஆறுதல் வார்த்தைகள் பாரதியின் கவலையைக் குறைப்பதாகத் தெரியவில்லை.

''அம்மா, ஏனப்பா அழுகிரு? மாமா போனதாலைதானே... மாமா எங்கை அப்பா போனவர்? மாமாவைக்கூட்டிக் கொண்டு வாருங்கோ.''

திடுமெனப்பூமணி அவ்விடத்திலே பிரசன்னமானுள். குழந்தையை உலுப்பி உறுக்கினுள். இழுத்துக்கொண்டுகிணற்றடிப் பக்கமாக நடந்தாள். பாரதி மிகத்தீனமான குரலிலே வீறிட்டு அலறிக் கொண்டு தாயோடு இழுபட்டாள்..

(10-ம் பக்கம் பார்க்க)

கண்கவர் மரத்தளபாடங்கள், பிரம்புத்தளபாடங்கள்
ஸ்ரீல் தளபாடங்கள் (ஆர்பிக்கோ) முதலியவற்றிக்கு
யாழ் நகரில் பிரபல்யம்மிக்க ஸ்தாபனம்!



★ LONG LIFE
★ BEAUTIFUL DESIGNS
★ VARIETY OF CHOICE
FREE DELIVERY WITHIN
3 MILES RADIUS




டில்கா பேணிச்சர் பலஸ்
DILKA FURNITURE PALACE 234,236, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். போன்: 24186

செற்றிகள் ரூபா 4700/- முதல் — அலுமாரிகள் 3500/- முதல் — கபினற்றுகள் 950/- முதல்

# இலக்கிய உலகு

**ஈ.கே.ஆர்**

தமிழ் சஞ்சிகைகளுக்கு முன்னேடியாகத் திகழ்வது 'ஆனந்த விகடன்!' தேவன், கல்கி போன்றவர்களை ஆசிரியர்களாகக் கொண்ட பெருமைக்குரியது! அந்தக்காலத்தில், கதையோ, கட்டுரையோ, கவிதையோ எது பிரசுரமானுலும் அவற்றின் நீளத்தை 'ஸ்கேல்' வைத்து அளந்துபார்ப்பார்கள்! அங்குலத்துக்கு இவ்வளவு என்று சன்மானத்தொகை நிர்ணயிக்கப்பட்டு, ஒருகதை இருபது அங்குல நீளத்துக்குப்பிரசுரமாகியிருந்தால், நாற்பது ரூபாய் என்று பணம் அனுப்பிக்கொண்டிருந்தார்கள்! வாசனின் மகன் பாலசுப்பிரமணியன் ஆசிரியராக இருந்த போதும், இந்த நடைமுறை பின்பற்றப்பட்டது.

''ஒரு அங்குலத்துக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து விடும்போது வேண்டியவர் வேண்டாதவர் என்ற பிரச்னை யெல்லாம் வராது!'' என்பது பாலுவின் கருத்து.

''அப்படியென்றல் திருவள்ளுவர் இப்போது உயிரோடு இருந்து அவர் விகடனில் **குறள்** எழுதினுல் அவருக்கு, குறளின் நீளத்தை அளந்து அதற்குத் தகுந்தபடி ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய்கூடச் சன்மானம் கிடைக்குமோ என்பது சந்தேகம்!'' என்று அந்தச்சமயம் அங்கு உதவி ஆசிரியராக இருந்த பழம்பெரும் பத்திரிகையாளர் 'சாவி' சொன்ன போது,

அப்போதுதான் பாலு சிந்திக்கத்தொடங்கினுர்! அந்த வாரத்தோடு 'ஸ்கேல்'வைத்து அளக்கும் முறை ஒழிந்தது!

## இலக்கிய வட்டத்துக்கு என்ன நடந்தது?

பல்லாண்டுகாலத்துக்கு முன் யாழ்ப்பாணத்தில் சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும் இயங்கி வந்த யாழ். இலக்கிய வட்டம் என்ற அமைப்புக்கு என்ன நடந்தது? மீண்டும் நாடகக் கலைஞர் ஏ. ரி. பொன்னுத்துரையும், எழுத்தாளர் செங்கை ஆழியனும் தலைவர் செயலாளர் என்றவரிசையைக் கொண்டு இயங்கத்தொடங்கியிருப்பதாக ஒரு இனிப்பான செய்திவந்தது! ஒன்றே, இரண்டு தபாலட்டைகளும் யாழ். இலக்கிய வட்டத்தின் பெயரோடு கண்களில்பட்டன! அவ்வளவுதான்!

இலக்கியமே மூச்சாக திரிந்தவர் கனக செந்தி!

அவரோடுஇன்னும் சில இலக்கிய மூச்சுக்களான கவிஞர் வி. கந்தவனம், மறைந்த மதுர கவி இ. நாகராஜன், கே. வி. நடராஜன், காரை. செ. சுந்தரம்பிள்ளை, யாழ்வாணன், சு. வே., செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், சசிபாரதி, க. செ. கு., பண்டிதர் சச்சிதானந்தன், கவிஞர் கல்வயல் குமாரசாமி, ஏ. ரி. பொ., நாவேந்தன் போன்றவர்கள் இணைந்து ஆரம்பித்த இந்த எழுத்து இயக்கம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைச் செய்தது! யாழ்.மாநகரசபை கேட்போர் கூடத்தில் சந்தித்து, கருத்தரங்குகளை நடத்தி, சில சாதனைகளும் செய்திருக்கின்றது. சாகித்தியமண்டலப் பரிசுகள் பலவற்றை இலக்கியவட்ட அங்கத்தவர்கள் பலர் பெற்றிருந்திருக்கிறுர்கள்! புத்தக வெளியீடுகள் பதினைந்துக்கு மேல்! இந்த இயக்கம் மீண்டும் புத்துயிர் பெற்றபோது மகிழ்ச்சியால் பூரித்தோம். தூங்கும் இந்த வட்டம் மீண்டும் விழித்துச் செயல்பட வேண்டும்.

## புதுமைப்பித்தனும் அரியரத்தினமும்

யாழ்ப்பாணத்திலிருந்து அப்போதுஇலக்கியவாரப்பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்த 'ஈழகேசரி'யின் ஆசிரியர் ராஜ அரியரத்தினம், சென்னைக்கு ஒருதடவை சென்றிருந்தார்.

அந்தநேரத்தில், ஜோதி நிலையப் பிரசுராலயத்தில், புதுமைப்பித்தனைச் சந்தித்தார். அப்போது ஜோதி நிலையத்தில் புதுமைப்பித்தன் மொழி பெயர்த்து இருந்த 'பிரேத மனிதன்' புத்தகத்தை அரியரத்தினத்திடம்அன்பளிப்பாகக் கொடுத்தார் புதுமைப்பித்தன்! அப்படிக் கொடுக்கும் போது, அதில் கைப்பட ஒன்றையும் எழுதிக்கொடுத்தார். அவர் எழுதிக்கொடுத்தது;

''அறம் செய்ய விரும்பு!- ஆனுல் செய்யாதே!''

## ஜெயகாந்தன் சிறப்பு

பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனின் கதைகள், நாவல்கள் முதலியவற்றைத் தொடர்ந்து பிரசுரம் செய்யும் பத்திரிகைகள், நேரில் சென்றுதான் அந்தந்த வாரத்திற்குரிய படைப்புக்களைப் பெற்று வருவார்கள்! தமிழகத்தில் எந்தவொரு எழுத்தாளருக்கும் இல்லாத சிறப்பு ஜெயகாந்தனுக்கு உண்டு! இவர் இதுவரை வெளியிட்டுள்ள அனைத்து நூல்களிலுமுள்ள இவரது முன்னுரைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, தனியாக 'ஜெயகாந்தன் முன்னுரைகள்' என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டுள்ளார்கள்!

## செந்தி மாஸ்டர் சொன்னதை மறக்காதே!

நேற்று எழுதினவனை நீ சொல்லாவிட்டால், நாளைக்கு எதுகிறவன் உன்னைச் சொல்ல மாட்டான்!

— எவ்வளவு பெரிய உண்மை! அடிக்கடி இதனைச் சொல்லுபவர் யாரென்று அந்த மனிதனேடு பழகியவர்களுக்குத் தெரியும்!

இரசிகமணி கனக. செந்திநாதன் இன்று, நம்மோடு இல்லாவிட்டாலும், அந்தப்பெரும் மனிதர் சொன்ன சில விஷயங்கள் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இருட்டடிப்புச் செய்பவர்கள் இதனை மனதில் கொள்ள வேண்டும்!

## மறுமலர்ச்சி காட்டிய மணிக்கொடி

புதுமைக்கும் புதுமலர்ச்சிக்கும் கட்டியம் கூறிய சஞ்சிகை 'மணிக்கொடி'! அதன் மணிவிழா என்பது தமிழ் இலக்கியத்தை நேசிப்பவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு ஜயந்தி! 'மணிக்கொடி' யின் மறுமலர்ச்சிப் பாதையில் எமது நாட்டு எழுத்தாளர்களும் துணிச்சலுடன் நடை போட்டுள்ளனர்!

அ. செ. மு, வரதர், தாழையடி, சொக்கன், சு. வே., அ. ந. க. போன்ற புகழ்பூத்த எழுத்தாளர்கள் ஈழத்து இலக்கியப் பரப்பில் புஷ்பிப்பதற்கு விதையூன்றியது 'மணிக்கொடி' என்ருல் மிகையாகாது.

மறுமலர்ச்சி இலக்கியப்பிரவாகத்தினது தாக்கத்தின்விளைவாக 'ஈழகேசரி' முதற்கொண்டு டொமினிக் ஜீவாவின் இன்றைய மல்லிகை வரை பத்திரிகைகள் சஞ்சிகைகளின் உருவாக்கம் சாத்தியமானது பற்றி இப்பொன்விழா ஜயந்தி தருணத்தில் நாம் நன்றியுடன் நினைவுகூர வேண்டியவர்களாயுள்ளோம்.

மறுமலர்ச்சி அலை, தமிழகத்து எழுத்தாளர்களையும் பத்திரிகைகளையும் எத்துணை பாதித்தது என்பதை 'மணிக்கொடி' வாயிலாக நாம் அறியக் கிடைத்தமையே இங்கும் எழுத்துலகில் புத்துணர்வு கிளர ஏதுவாயிற்று.

இன்று தமிழகத்திலுஞ்சரி, ஈழத்திலுஞ்சரி, புதுமையில் புதுமை காணும் அதிவேக முனைப்புத் தோன்றியிருக்கிறதெனின், அதற்கான பெருமை 'மணிக்கொடி'யையே சாரும். இன்று தமிழகத்தில் 'தீபம்' ஒளி வீசுகின்றதென்றுல் அல்லது 'தாமரை' விரிந்து மலர்கின்றதென்றுல் அல்லது இங்கு 'மல்லிகை' மணம் பரப்புகின்றதென்றுல் - இந்த இலக்கிய ஒளியையும் மணத்தையும் அனுபவிப்பவர்கள் 'மணிக்கொடி'க்கே நன்றி கூற வேண்டும்.

# செல்லம்மா

**காரை. செ. சுந்தரம்பிள்ளை**

காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங்கயிருய்ச் செல்லம்மா நிற்கின்றுள்
ஓய்ந்த கடையாக
உலர்ந்த சருகாகச்
சாய்ந்த பொழுதாகத்
தலை மேலே கை வைத்துக்
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிருய்ச் செல்லம்மா நிற்கின்றுள்!

வெங்காயம் நட்டதுவும் விழிபிதுங்கக் காய் கறிகள்
சங்கானைச் சந்தையிலே தலை மேல் சுமந்து விற்றும்
பங்கு வியாபாரம் பார்த்துக் களைத்தும்; அச்
சிங்காரம் தரகனிடம் சிக்கிப் பணத்தோடு
தங்க நகை யாவும், தாரை வார்த்தும்; நெடுநாள்
பட்ட துயரமெல்லாம் பாம்பாகத் தேளாகக்
கொட்டக் குமுறி மனம் கொந்தளிக்கத் துன்பமெலாம்
மேய்ந்து அவளுளத்தை வேதனைகள் செய்திடவே
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிருய்ச் செல்லம்மா நிற்கின்றுள்.


குழந்தைக்குப் பாலின்றிக் கும்பி எரிகையிலே
தளர்ந்த அவளுக்குச் சற்று மிரங்காமல்
கழன்ற உறவினரைக் காறி உமிழ்ந்தவரைச்
சுழன்று வர வைப்பனெனச் சூளுரைத்து நின்றதுவும்
பெற்ற மகன்வளர்ந்து பெரிதாகிப் பள்ளியிலே
கற்று முடித்துப்பல் கலைக்கழகம் தான் சென்று
முற்றுமவள் உழைப்பை முழுதாகவே யுறிஞ்சிப்
பெற்ற வொரு பட்டத்தால் பெருமையிவள்
[பெற்றதுவும்

கரும்பு நாடி வந்தவொரு கட்டெறும்புக் கூட்டம்
[போல்
விரும்பி யிவள் மகனை விலை கொடுத்து வாங்குதற்குப்
பெரும் பணக்காரரெலாம் பேரமே பேசியதும்,

திருமணமே செய்து வைத்துச் சீதனமே வாங்கியதும்
மருமகளால் சண்டையிட்டு மகன் பிரிந்து
[சென்றதுவும்
சீமைக்குப் போய்ப் பெரிய சீமானுய் வாழ்ந்ததுவும்
ஊமைக் கனவாக உள்ளுக்குள் ளேயறுக்கக்
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிருய்ச் செல்லம்மா நிற்கின்றுள்.

ஆண்டு பல சென்றும் அவன் வந்து பார்க்கவில்லை
அன்னைக்கரைக் காசும் அவனே அனுப்பவில்லை
என் மகன் இவன்தான், என்றே பலர் பழித்த
காண்டா மிருகமவன் கயமைக் குணம் படைத்தோன்
மாண்டுவிட்டான் என்ற மரணச் செய்தி (இ) கேட்டு
நெஞ்சம் வெடிக்க நிலை தளர்ந்து யாரெனக்குத்
தஞ்ச மெனக்குமுறித் தலையிலடித்தபடி,
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிருய்ச் செல்லம்மா நிற்கின்றுள்.

**காகிதாதிகள் கையிருப்பாளர்**
அச்சு வேலைகளுக்குத் தேவையான சகலவிதமான இறக்குமதி செய்யப்பட்ட காகிதாதிகள் நியமிக்கப்பட்ட விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
ரூபா 235 முதல்ரூபா 985 வரை
**மின்சாரப் பொருட்கள் இறக்குமதியாளர்**
சகலவிதமான மின்சார உபகரணங்களும் தங்குதடையின்றி வழங்குபவர்.
விலை 25/- முதல் 8000/- வரை.
**பாடசாலை உபகரணங்கள் விற்பனையாளர்**
கொப்பி வகைகள் மற்றும் உபகரணங்கள்.
ரூபா 2/20 இருந்து ரூபா 85 வரை
மற்றும் பல்வேறு அலங்கார அன்பளிப்புப் பொருட்களுக்கு
**அம்பலவாணர் அன் சன்ஸ்**
(தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபன முகவர்கள், இறக்குமதியாளர்கள்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291



# சிதம்பரத்தில் சிலமணிநேரம்

இ. நந்தசாமி

கடந்த ஜூலை மாத இறுதியில் எமது நாட்டில் இடம்பெற்ற இலங்கையின் வரலாற்றில் என்றுமே அழித்துவிட முடியாத கறையை ஏற்படுத்திவிட்ட இனக்கலவரங்களினுல் வீடுவாசல்களை இழந்து, உடைமைகளை இழந்து - கணவன், மனைவி, தந்தை, தாய், சகோதரர்கள், குழந்தைகள் முதலிய உறவுகளை இழந்து நாதியற்ற நிலையில் முகாம்களில் கிடந்து சீரழிந்த தமிழர்களை அவர்களது சொந்த மண்ணை யாழ்ப்பாணத்திற்குச் சுமந்து வந்தது 'சிதம்பரம்'. பாரதப் பிர்தமர் அன்னை இந்திரா அந்தப் பெண்ணும் பெரிய உல்லாசக். கப்பலைக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

24ம் திகதி ஆரம்பமான இனக்கலவரத்தின் வேகம் சற்றுத் தணிந்திருந்த நாள் முதல், இன்று வரும் நாளை வரும் என வானொலிகளிலும் பத்திரிகைகளிலும் நாள்தோறும் செய்திகளைக் கேட்டு எதிர்பார்த்திருந்தபோது ஒருஞாயிறு தினமான ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி இரவு 'சிதம்பரம்' கொழும்புத் துறைமுகத்தை வந்து சேர்ந்தது.

1958ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது கொழும்பில் தமது உடைமைகளை இழந்து உயிருக்காகப் போராடி வெளிநாட்டுச் சரக்குக் கப்பல் ஒன்றின்மூலம் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு வந்து ஒரு நாள் மாலை திடீரென வெறுங்கையுடன் வீட்டுக்கு வந்த எம்மையெல்லாம் மகிழ்விக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கிய எனது உடன்பிறந்த அண்ணன்மூலம்—

இனக்கலவரம், அகதிகள் கப்பல் பிரயாண அனுபவங்களைக் கேட்டறிந்த நான் —

மீண்டும் 77ம் ஆண்டு இனக்கலவரம், அகதிகள் முகாம், அகதிகளின் கப்பல் - விமானப் பயணம் என்பனபற்றியெல்லாம் பத்திரிகையாளனுக இருந்து அறிந்து கொண்டேன்.

83ம் ஆண்டில்—

இனக்கலவர நிகழ்வுகள், அழிவுகள், பாதிப்புக்களை நேரில் அனுபவித்து - அவதியுற்று வேதனைகளால் நெஞ்சங்கள் உப்பிவிட்ட லட்சக்கணக்கான அகதிகளில் ஒருவனுகிவிட்ட என்னுடன் 1649 அகதிகளை யாழ்ப்பாண மண்ணுக்கு ஏற்றிவந்தது 'சிதம்பரம்.'

## செக்கிழுத்த செம்மல்

இந்திய மண்ணின் விடுதலைக்காகப் போராடி, போராட்டக் காலத்தில் செக்கிழுத்த செம்மல் - அந்நியருக்கு எதிராகக்கப்பல் ஓட்டிய தமிழன் - வ. உ. சிதம்பரனுரின் ஞாபகார்த்தமாக அவரது பெயரைத் தாங்கியபடி இந்தியா - மலேஷியா - சிங்கப்பூர் ஆகிய நாடுகளிடையே கடலில் மிதந்து திரியும் உல்லாச புரியான இந்தச் சிதம்பரம் இலங்கைக்கு வந்ததே ஒரு கதை.

மின்னுமல் முழங்காமல் புயலெனக் கிளம்பிய வெறியாட்டத்தில் பலிக்கடாவாகிச் செய்வதறியாது திகைத்துத் தடுமாறி உயிரைக் கையிலே பிடித்தபடி உறவுகளையும் உறைவிடங்களையும் துச்சமாய்த் தட்டியெறிந்து தறிகெட்டு ஓடிய தமிழர்கள் முகாம்களில் சேர்க்கப்பட்டு, அவர்களது சொந்த இடத்திற்கு அழைத்துச் செல்வதற்குச் சரக்குக் கப்பல்களில் சரக்குகளைப் போல அடைத்து அனுப்பப்பட்ட சமயம், அகதிகளுக்கெனக் கோடிக்கணக்கில் பெறுமதியான உணவு, மருந்து, உடைகள் முதலிய பல்வேறு உதவிகளுடன் 'சிதம்பரம்' பிரயாணிகள் கப்பலையும் இந்தியா இலங்கைக்கு அனுப்புகிறது என்ற செய்தி வானொலியிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

அகதி முகாம்களிலும் நண்பர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்த தமிழர்கள் பாரிய கப்பலான சிதம்பரத்தின்மூலம் பெருமளவில் சொந்த மண்ணுக்குச் சென்றுவிடுவார்கள் என எண்ணியிருந்த வேளையில் அந்த எண்ணத்தில் இடிவிழுந்ததுபோல் மற்ருெரு செய்தி வெளிவந்தது.

## அந்தத் திடீர்ச் செய்தி

உலகின் மிகப்பெரிய கப்பல்களில் ஒன்ருன ''சிதம்பரம் செல்வதற்குக் காங்கேசன் துறைக் கடல் ஆழம்போதாது. எனவே அக்கப்பலை இலங்கைக்கு அனுப் முடியாது'' என இந்தியக்கப்பல் கூட்டுத்தாபனம் அறிவித்துவிட்டது என்பதே அச்செய்தி.

இதேசமயம் தமிழ்அகதிகளை வடபகுதிக்குக் கூட்டிச் செல்வதற்கு இந்தியக் கப்பல்கள் தேவையில்லையென இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குத்தெரிவித்துவிட்டது என்ற செய்தியும் பின்னர் கிடைத்தது.

இச்செய்திகளால் நாம் அதிர்ந்திருந்த வேளை வேருெரு திடீர்ச்செய்தி, 'கண்ணீரின் உப்பும் இனிக்கும்' என்பதாயிருந்தது.

ஆகஸ்ட் 8ம் திகதி.

இரவு 7 மணிமுதல் கொழும்புத் துறைமுக 'எலிஸபெத்' இறங்குதுறையில் காத்திருந்து பதினெரு மணியளவில் கப்பலில் ஏறினேம்.

## சோதனைபோ சோதனை!

கப்பலில் ஏறுவதற்குமுன் எமது நாட்டுக் கடற்படையினர் எமது உடைமைகளைச் சோதனையிட்டனர்.

அதற்காக வரிசையில் நின்றபோது எம்மை வழி அனுப்புவதற்கு வானவர் மலர் தூவுவதுபோலச் சிறிதுநேரம் மழையும் பெய்தது.

''நீண்ட நாட்களுக்குப் பின் அன்று பெய்தஅந்த மழை ஜூலை 24, 25, 26ம் திகதிகளில் கொழும்பு தீப்பற்றி எரிந்தபோது பெய்திருந்தால் கொழும்பு நகரும் தமிழனின் பல சொத்துக்களும் கோடிக்கணக்கில் சாம்பலாகியிருந் திருக்காது: ஆண்டவன்கூட தமிழனைக் கைவிட்டுவிட்டான்.''

- வயோதிப அகதி ஒருவரின் அங்கலாய்ப்பு இது.

''வாங்கம்மா —

''பார்த்து வாங்கஐயா —

''பாப்பா பெட்டியைத்தந் திட்டுப்பார்த்து வாங்க —''

கப்பலில் ஏறியபோது எம்மை எல்லாம் அரவணைத்த இந்த வார்த்தைகள் நொந்து சோர்ந்து போயிருந்த எமது உள்ளங்களுக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்தது என்பதை வெறும் வார்த்தைகளால் கூறிவிடமுடியாது.

சிதம்பரத்தில் பணிபுரிந்த இந்திய நண்பர்கள் — கூடுதலானேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் — அன்புடனும் இன்முகத்துடனும் எம்மை வரவேற்றபோது எமது சொந்த மண்ணில் காலடிவைத்து விட்விட்டோமோ என்று எண்ணத்தோன்றியது.

எல்லோரும் அகதிகளாக வந்திருேம்; அதற்குள்ளும் எப்படியோ தமது செல்வாக்கைப் பயன் படுத்திய சில உயர்ந்தவர்க்கத்தமிழர்களுக்குகப்பலில் விசேஷ அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாகமூட்டைமுடிச்சுகளுடனும் குழந்தை குட்டிகளுடனும் பலரும் கொஞ்சநேரம் அங்குமிங்குமாக அறைகள் தேடி அலைந்து சிரமப்பட்டுப் போனுர்கள். அவ்வேளை நன்மனம் படைத்த ஒரு கப்பல் ஊழியரின் முயற்சியால்பாகுபாடின்றி சகலருக்கும் வசதியின்படி அறைகள் கிடைத்தன.

## உயர்வு தாழ்வு இல்லை!

''இங்கேஉயர்ந்தவர், தாழ்ந்தவர் என எவரும் கிடையாது. எல்லோரும் எமதுதமிழ்ச்சகோதரர்களே — எல்லோரும் அகதிகளே! சகலருக்கும் சகல அறைகளையும் திறந்துவிடுங்கள்.''

அந்த ஊழியரின் குரல் இது.

ஆண்களை விட கிறுவர்களுக்கும் பெண்களுக்குமேஅறைகள் கிடைக்க வேண்டும் என்பதில் உழியர்கள் கவனமாக இருந்தனர்.

அந்த அர்த்த ராத்திரியிலும் அகதிகளுக்கு-குறிப்பாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும்-இருப்பிட அறை வசதிகளை ஒதுக்கித் தருவதற்காக விழித்திருந்து செயல்பட்ட அந்த ஊழியர்களை நாம் என்றுமே மறக்க முடியாது.

''அம்மா அறைகிடைச்சுதா?'

''பாப்பா எங்கேபோறீங்க?''

''பொண்ணு அறை வேணுமா?''

''ஐயா இடம் கிடைச்சுதா?''

அந்த ஜாமத்திலும் நம் எல்லோரையும் அந்த நல்லிதயங்கள் விசாரித்துக் கொண்டிருந்தன.

அவர்கள் அக்கறை வெந்து போயிருந்த எமது இதயத்திற்குப் பெரும் ஆறுதல் தந்தது.

ஏற்கனவே அறிவித்திருந்தபடி கப்பல் இரவு பத்து மணிக்குப் புறப்பட முடியாமல் போய்விட்டது. அகதிகளை ஏற்றி முடியவே இரவு ஒரு மணி கடந்து விட்டது.

அதிகாலை 4 மணிக்குப் புறப்படும் எனக்கதை அடிபட்டது.

இதனிடையே அதிகாலை 2 மணியளவில் எம்மிடையே இருந்த 'சிறு பெண்' ஒருத்தி காய்ச்சலால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்.

எமது தளத்தில் பணி புரிந்து கொண்டிருந்த திரு. இருதயராஜா என்ற ஊழியரை அணுகினேன்.

அவர் உடனடியாக எமது அறைக்கு வந்து கப்பலில் இருக்கும் டாக்டரிடம் அழைத்துச் சென்று அப்பிள்ளையைக் காண்பித்தார். டாக்டரும் அன்புடன் அவதானித்து மருந்து தந்தனுப்பினுர்.

## கப்பல் புறப்பட்டது

ஒருவாறுக காலை 6-30 மணியளவில் கப்பல் புறப்பட்டது.

கப்பலின் உணவு மண்டபத்தில் காலை உணவாகப் பாணும் பால் கோப்பியும் வழங்கப்பட்டன.

போதியளவு பாண் தந்தார்கள். அத்துடன் தங்கள் அன்பையும் அள்ளித்தந்தார்கள்.

கப்பல் புறப்பட்டு அரை மணித்தியாலம் கடந்திருக்கும், அநேகர் வாந்தி எடுக்க ஆரம்பித்து விட்டனர். கப்பலில் உள்ள ஆஸ்பத்திரியிலும் எம்முடன் அகதிகளாக வந்த டாக்டர்கள். வைத்திய மாணவர்கள் அமைத்திருந்த வைத்தியப் பிரிவிலும் வாந்திக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.

சாப்பாட்டுக்காகச் சென்ற எம்மில் அநேகர் சாப்பாட்டு அறைக்கு அருகிலிருந்த சர்வமத ஆலயத்தைக் கண்டு சாப்பாட்டையும் மறந்து அந்த ஆலயத்திற்குள் நுழைந்து விட்டோம்.

வாசகர்களையும் அந்த ஆலயத்திற்கு அழைத்துச் செல்கிறேன்—

மீனுட்சி அம்மன், சிவபெருமான், முருகன், பிள்ளையார் போன்ற இந்து விக்கிரகங்கள் ஒரு அறையிலும் அதை ஒட்டிய அறையில் முஸ்லிம்களின் பள்ளிவாசல், கிறிஸ்தவர்களுக்காகத் தேவாலயமும் சிறிது சிறிதாக அழகாக அமைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சர்வமத ஆலயத்திற்குச் சென்று திரும்பியவர்களின் முகத்தில் கலவர இன்னல்களை எல்லாம் மறந்திருந்த பொலிவையும் திருப்தியையும் காணக் கூடியதாக இருந்தது.

அன்று மாலை ஆறு மணியளவில் அந்த ஆலயத்தில் பூஜை, ஆராதனைகள் இடம் பெற்றுப்பிரசாதங்கள்வழங்கப்பட்டன. இப்பூஜை ஆராதனைகளில் அனைத்து அகதிகளுமே கலந்து கொண்டனர் என்று கூறலாம்.

அப்பிள் பழநறுக்குடன் சகலருக்குமே சர்க்கரைச்சாதம் வழங்கப்பட்டது.

கப்பல் ஓடிக் கொண்டிருக்கிறது —

அகதிகளின் நிலையும் மாறிக் கொண்டிருக்கிறது — ஆம் கப்பலிலுள்ள வசதிகள், உழியர்களின் உபசரிப்பு, பாசம் கவர்ந்த வார்த்தைகள் எல்லாமே மெது மெதுவாக அகதிகள் பயணத்தை உல்லாசப் பிரயாணமாகமாற்றிக் கொண்டிருக்கின்றன.

கண்ணீர்க் கதைகளும் ஆங்காங்கே வெளியாகிக் கொண்டிருந்தன.

அகதிகள் தங்களுக்குள் தமது வேதனை ததும்பும் அனுபவங்களைப் பரிமாறிக்

(10-ம் பக்கம் பார்க்க)

**கசப்பான நினைவுச்**

**சுமையுடன்,**

**நம்பிக்கையுடன்**

**தன்னை நாடி வந்த**

**நாதியற்ற அந்த ஜீவன்களை**

**ஏற்றிக்கொண்டு**

**'திருப்தி'யுடன்**

**புறப்படுகின்றது—**

**சிதம்பரம்!**

# வடு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ''அவன் கடிதத்திலே சுருக்கமாக எழுதினதுதான் விஷயம். அவன் குழந்தைப் பிள்ளையில்லே. யோசிக்கத் தெரிந்தவன்.. நீ அதைச் சாட்டிக் கோளாறு எடுத்துக் கொண்டிருக்க வேண்டாம். உன்னைப் போலத்தான் எனக்கும் அவனிலே அன்பிருக்குது பேசாமல் பார்க்கவேண்டிய அலுவல்களைப் பார். குழந்தையை அழுவிக்காதை ''

பட்டென்று அவளின் வார்த்தைகள் உதிர்ந்துசிதறின:

''உங்களின்ரை தம்பியெண்டால் இப்பிடி லோசாச் சொல்லுவீங்களோ?''

நெஞ்சையடித்த அவளின் வார்த்தைகளை, வார்த்தைகளால் எதிர்கொள்ளும் பொறுமை எனக்கு இருக்கவில்லை. கையை

மூர்க்காவேசமான பளார் பளார்

எதிர்பாராத என் செயலால் அதிர்ந்து போனவள் திகைப்பிலிருந்து மீள நெடுநேரம் சென்றது. வார்த்தைகளை இழந்து நின்றாள்.

வீடுதிரும்பியபோது விறுந்தையிலிருந்து பாரதி விளையாடிக்கொண்டிருந்தாள். அவளைச் சமாதானப்படுத்தக் கையிலே சொக்கிளெற்றும், மனதிலே யோசனையுமிருக்கிறது. வாரித் தூக்கினேன்.

''பாரதிக்குட்டிக்கு ஒரு சங்கதி சொல்லப் போறன்...''

''என்னப்பா.. சொல்லுங்க. சொல்லுங்க. ''

ஆர்வம் வார்த்தைகளில், முகத்தில், கண்களில் —

''நீங்க நெடுகக் கூட்டிக் கொண்டு போகச்சொல்லுவீங்களே ஒருஇடத்துக்கு... அங்கை அடுத்த கிழமை கூட்டிக் கொண்டு போகப்போறன் ...''

அவள் கண்களை மலர்த்தி யோசித்தாள். பிடிபடவில்லை. கெஞ்சுகிற குரலிலே மீண்டும் கேட்டாள்: ''எங்கையப்பா?''

''கொழுப்புக்கு.. மிருகக் காடகிச்சாலைக்கு. உங்களின் ரைரீச்சர் பார்க்கச் சொல்லிச் சொன்னுவே அந்த மிருகக்காட்சிச்சாலைக்கு...'' —நான் சொல்லிமுடியவில்லை. திமிறிக் கொண்டு என்னை விட்டு இறங்கிய பாரதி, தடுமாறுகிற குரலிலே தளதளத்தாள்.

''இல்லையப்பா. என்னை அங்கை கூட்டிக்கொண்டு போகாதேங்க... அங்கை போனுல் அகதியாய்ப் போய்விடுவமாம். சுமி சொன்னவள். அவள் எங்களின்ரை வகுப்புக்குப் புதிசாய்வந்தபிள்ளை. கொழும்பிலை இருந்தவளாம்,, அவளின்ரை அப்பா செத்துப் போனுராம்...வீடு உடைஞ்சு அவையளிட்டை இப்ப ஒண்டுமில்லையாம்'' அவள்தான் சொன்னவள் ...கொழும்புக்குப்போனுல் அகதியாய்த்தான் வரவேணுமாம்.. வேணுமப்பா, கொழும்புக்கு நான் வரமாட்டன்.''

நான் கணத்தில் குழம்பிப் போனேன். வேணு கோபாலனின் சிந்தனைபோய் இப்போது பாரதியைப் பற்றிய கவலை மனதினுள் கனக்கலாயிற்று.

(யாவும் கற்பனை)

# சிதம்பரத்தில் சில மணி நேரம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த அதே வேளையில், கப்பல் ஊழியர்கள் பலரும், எம்மில் பலரின் துயர்மிகு அனுபவங்களைத் தாமாகவே முன் வந்து கேட்டறிந்து கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

கல்யாண வீட்டுச் சாப்படு போன்றிருந்தது எமக்குப் பகல் தரப்பட்ட உணவு! வெள்ளித் தட்டில் பருப்பு, பாயசத்துடன் பகல் உணவு கிடைத்தது.

மாலையில்—

கப்பலில் நட்புக் கொண்ட இலங்கை-இந்திய நண்பர்கள் சிலருடன் கப்பலைச் சுற்றிப் பார்வையிடப் புறப்பட்டேன். கப்பலில் பணிபுரியும் நண்பர்கள் அதனைப் பார்வையிட உதவியாக இருந்தனர்.

## கப்பலைப்பற்றிய சில தகவல்கள்

கப்பலைக் குறித்து சேகரித்த தகவல்கள்பற்றி ஓரிருவரிகள்:

ஃ 17 ஆண்டுகளுக்கு முன் மேற்குஜெர்மனியில் கட்டப்பட்ட 'சிதம்பரம்' கப்பல் 200 கோடி இந்திய ரூபா பெறுமதியாது.

ஃ 544 அடி நீளமும் 78.8 அடிஅகலமும்கொண்ட இக்கப்பலே இந்தியாவின் மிகப் பெரும் பிரயாணிகள் கப்பலாகும்.

ஃ கப்பலின் நுழைவாயிலை ஒட்டிச் சிறிய நூல்நிலையம், அதன் அருகே நலன்புரி உத்தியோகத்தர் திரு. ராஜூவின் அறை இருந்தது.

ஃ வைத்திய நிலையம், நீச்சல் தடாகம் - அதில் அன்று நீர் இருக்கவில்லை.

ஃ தீர்வையற்ற கடை பூட்டி சீல் வைக்கப்பட்டிருந்தது.

கப்பல் அறைகள் 3 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தனித்தனியே இவற்றின் அமைப்புக்கள் மற்றும் வசதிகள்பற்றி இங்கு கூறின் விரியும்.

மொத்தத்தில் இது ஒரு மிதக்கும் ஹோட்டல் என்றே கூறலாம்.

முதலாம் வகுப்புக்குச் செல்லும் முகப்பில் கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனுரின் இடுப்பளவு உருவச்சிலை அழகாக வைக்கப்பட்டிருக்கிறது.

அந்த விடுதலை வீரரை இந்திய மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

'சிலுக்கு சிலுக்கு சிலுக்கு' - அகதிகளை மகிழ்விக்க அன்று இரவு கப்பலின் மேல் தளத்தில் காண்பிக்கப்பட்ட தமிழ் சினிமாப்படம் இதுதான்.

இரவுச் சாப்பாடும் சோறுதான். மாலை பூஜை. இரவுச் சாப்பாடு முடிந்த கையோடு இரவு 8 மணிக்கு ஆரம்பமான படம் 11 மணியளவில் முடிவடைந்தது.

மறுநாள் காலை எழுந்ததும் ஏதோ ஒரு கரை தென்பட்டது. அது முல்லைத்தீவுக்கரை என்றூர்கள்.

காலை உணவு உப்புமாவும் பால் கோப்பியும்.

சிறிது நேரத்தில் மேல்தளத்திற்கு வந்து பார்த்தபோது வெள்ளை வெளேரென ஒரு கரை தெரிந்தது.

வல்லிபுரக் கோவிலை ஒட்டிய பகுதியில்தான் இவ்வாறுன வெள்ளை மணல் உண்டு. அந்தக்கரைதான் இது என்றூர்கள். பயணிகள் ஆரவாரம்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

சிறிய கடல் என்பதனுல் போலும் காலையிலேயே கப்பலின் வேகம் குறைக்கப்பட்டுவிட்டது. நேரம் கூடிக் கொண்டிருந்தது. மெல்ல மெல்லக் காலை மதியமாகியதும்-

— பகல் உணவு தயிர்ச்சாதம் - இலங்கை சந்தைப் படுத்தும் திணைக்களத்தின் பாஷன்பழ ரசம், குழுக்கோரச பக்கட்.

கப்பல் காலை 8 மணிக்குக் கரை சேர்ந்துவிடும் என முன்பு அறிவிக்கப்பட்டதால் உணவு தயாரிக்கவில்லை. பின்பு அவசரத்தில் தயாரிக்கப்பட்டதே இந்தத் தயிர்ச்சாதம் என்றூர் அவர் கவலையுடன்.

பகல் 12 மணியளவில் கப்பல் காங்கேசன்துறையை வந்தடைந்தது. முதலில் எங்கோ தொலைவில் நிறுத்தப்பட்ட கப்பல் பின்னர் சிறிது தூரம் கரையை நோக்கிச் செலுத்தப்பட்டு நிறுத்தப்பட்டது. அந்த இடமும் நடுக்கடல்தான்.

காங்கேசன் துறைமுகத்திலிருந்து வந்த இழுவைக்கப்பல் ஒன்றில் சிதம்பரத்திலிருந்து இறக்கி நாம் எல்லோரும் ஏற்றப்பட்ட போதுதான் உல்லாசப் பயணிகள் என்ற நிலையிலிருந்து நாம் அகதிகள் என்ற நிலைக்கு மாறினேம்.

கொழும்பில் கரையிலிருந்து கப்பலில் ஏறினேம். துறைமுக வசதி குறைந்த இங்கு கடலில் உள்ள இன்னெரு கப்பலில் இறங்குகிறேம்.

நாம் எல்லோரும் இறங்குவதற்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து எம்மை இன்முகத்துடன் வழியனுப்பிவைக்கின்றனர் சிதம்பரம் ஊழியர்கள்.

எம்மில் பலர் குறிப்பாக பெண்கள் நன்றிக்கடனுகச் சிந்திய ஆனந்தக் கண்ணீருடன் விடைபெறுகிறேம்.






சச்சி

# நவரசம்

## ஆதித்தனுருக்கு தெரிந்த காந்தியின் ரகசியம்

தமிழ்ப் பத்திரிகையுலகின் தந்தையெனக் கருதப்படுபவர் அமரர் சி. பா. ஆதித்தனுர். பாமர மக்களும் பத்திரிகை படிக்கும் பழக்கத்தை உருவாக்கியவர்; 'தினத் தந்தி' இதழ் மூலம் தமிழ் வாசகர் உலகில் நன்கு பரிச்சயமானவர். உலகமகா யுத்தத்தின் போது, காகிதப் பஞ்சம் ஏற்பட்டபொழுது தாமே வைக்கோலை நனையவிட்டு கூழாக்கி, காகித உற்பத்தி செய்து பத்திரிகை வெளியிட்ட பெருமைக்குரியவர்.

இளமையில் சிறந்த நிருபராகப் பணியாற்றிப் புகழ் சேர்த்தவர் அவர்!

லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டுக்கு காந்திஜி சென்றபோது, காந்திஜியுடன் ஆதித்தனுரும் பத்திரிகை நிருபராகச் சென்றிருந்தார். மாநாட்டு மண்டபத்தில் பல்நாட்டு நிருபர்களும் செய்தி சேகரித்துக்கொண்டிருந்தபோது, காந்திஜி எழுந்து சென்று சற்று நேரம் கழித்து மண்டபத்துக்குள் வந்தார். யாருக்கும், காந்திஜி ஏன் எழுந்து சென்றுர் என்பது தெரியவில்லை. ஆதித்தனுர் மட்டும் அந்த இரகசியத்தை அறிந்து கொண்டு அதனைத் தமது பத்திரிகைக்கு எழுதினுர்.

''ஆடிக்கொண்டிருந்த தமது பல்லைப் பிடுங்கி எறிவதற்காகவே காந்திஜி எழுந்து சென்றுர்'' என்று செய்தி வெளியிட்டிருந்தது.

## கண்பார்வையற்ற கவிக்குயில்

திருச்செங்கோட்டையைச்சேர்ந்த செல்வி. ஜி. லட்சுமி, ஏழு வயதில் கண் பார்வையை இழந்தார். நம்பிக்கையை இழக்காமல், வாழ்வில் எதிர்நீச்சல் போட்டுத் தமிழ் புலவர்களுக்கான பட்டத்தையும், விழிப்புலனற்றோருக்கான ஆசிரியச் சான்றிதழையும் பெற்றுர். இலக்கியச்சொற்பொழிவுகளினுலும் பட்டிமன்றங்கள்மூலமும் புகழ் பரப்பிவரும் லட்சுமி, பல்வேறு இலக்கிய சஞ்சிகைகளில் ஆயிரத்திற்கும் அதிகமான கவிதைகளைப் புனைந்துள்ளார்! 28 வயதான கவிக்குயிலுக்கு இன்னும் திருமணமாகவில்லை.

## கன்னியர் துயர்துடைக்கும் துர்க்கை

துர்க்கை வழிபாடு இன்று நமது நாட்டில் மட்டுமல்லாது வங்காளம், தமிழ்நாடு, ஆந்திராவிலும் பிரபல்யம் பெற்று விளங்கிவருகின்றது. நமது தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் மட்டுமன்றி எல்லா நாடுகளிலும், இவ்வழிபாடு பெண்களையே மிகவும் கவர்ந்துள்ளது. கல்யாணம் ஆகாத பெண்களுக்குக் கல்யாணம் நடைபெறும் என்ற நம்பிக்கையில் துர்க்கை வழிபாடு சிறப்புப்பெற்றுவருகின்றது. செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில், எலுமிச்சம் பழத்தைவெட்டி, துர்க்கா தேவியின் பாதங்களில் அபிஷேகம் செய்து ஒன்பதுவாரங்கள் வழிபாடு செய்யும் எவருக்கும் திருமணம் நடைபெறுமாம்.

## அதிசய பூங்கா

கல்கத்தா விலுள்ள தாவரவியல் பூங்கா உலகின் இரண்டாவது பெரிய பூங்காவாகும். இப்பூங்காவில் 200 வயதுடைய பலமரங்களும், மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படாத பல மரங்களும் உள்ளன. ஆறு கிளைகளையுடைய பனைமரமும் இங்கே உண்டு. இவற்றைவிட அதிசயம் இங்கு பைத்திய காரமரம் என்ருெரு மரமும் உள்ளது. இம்மரத்தின் இலைகள் அதாவது ஒரேமரத்தின் இலைகள், பல்வேறு அமைப்பிலுண்டு, இதனுல் அதனை பைத்தியகார மரமென்று அழைப்பார்கள்.

## சுவர்ப் பத்திரிகைக்கு நல்ல மவுசு

கல்கத்தாவில், ரசிகர்மன்றங்களோ இலவசமாக பத்திரிகை படிப்பதற்கான வசதிகளோ கிடையாது. இதனுல் கல்கத்தாவிலுள்ள பத்திரிகை நிறுவனங்கள், தமது விற்பனையை அதிகரிப்பதற்காகப் பகிரங்க சுவர்களில் தமது பத்திரிகைகளை ஒட்டிவிடுகின்றனர். காலையில் அங்கு ஏகப்பட்ட கூட்டமாயிருக்கும்.

யாழ்ப்பாணத்திலென்ன? இங்கு பத்திரிகைகளில் வெளியிடமுடியாத செய்திகளடங்கிய பல்நாட்டுப் பத்திரிகைகளை, இங்கு பொது இடங்களில் ஒட்டிவிடுகின்றனர்.

## அதிகம் விற்பனையாகும் நூல்

இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவிலும் வெவியிடப்படும் நூல்களிலேயே அதிகம் விற்பனையாவது பஞ்சாங்கம் தான். தற்போது வெளிநாடுகளிலும், இது அடி எடுத்து வைத்துள்ளது.

## முதலாவது முஸ்லிம் பெண் நீதிபதி

கேரளத்தைச் சேர்ந்த ஜனுபா பாத்திமா பீபீ உலகின்முதலாவது முஸ்லிம் பெண் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். சாதாரணகுடும்பத்தில் பிறந்த பாத்திமா இளமையில் கல்வியில் பல விருதுகளைப் பெற்றவர். முஸ்லிம் சமுதாயத்துக்குப் பெருமை சேர்த்துள்ள இப்பெண்மணி கேரள உயர்நீதிமன்றத்தில் பணிபுரிகின்றுர்.

## மல்யுத்த நிபுணி

அயாவுக் நாட்டின் இளவரசி டாட்டர் மல்யுத்த நிபுணி. 13ம் நூற்ருண்டில் எழுச்சிபெற்றசாம்ராஜ்யத்தில் இவளை மணப்பதற்குப் பல இளவரசர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தார்கள். எந்த இளவரசரும் இவளுடன் மல்யுத்தப் போட்டியிட்டு வெற்றிவாகை சூடினுல் இவளை மணக்கலாமென்பது மன்னரது உத்தரவு. தோற்றுப் போனுல் 100 ஆண்குதிரைகளைக் கப்பமாகத் தினசரி செலுத்த வேண்டும் என்பது நிபந்தனை. எந்தநாட்டு இளவரசரும் எளிதில் வெற்றி பெருததால், முப்பது வயதில் இளவரசிக்கு 10,000 குதிரைகள் சொந்தமாக இருந்தன.

## சகல பத்திரிகைகளையும் அதிகாலையில் படித்து முடிப்பவர்

பாப்பாண்டவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அதிகாலை ஏழுமணிக்கு இத்தாலியில் வெளியிடப்படும் சகல பத்திரிகைகளையும் படித்து முடித்துவிடுவார். இதனைவிட, அமெரிக்கா. பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து நாட்டுப் பத்திரிகைகளையும், ரஷ்ய பத்திரிகையான ''பிருவ்டா'' வையும் படித்துவிடுவார் இது அவரது அன்ருட வழக்கமாகும்.

## ''மணியன்'' மீது சி. ஐ. டி. நோட்டம்

பிரபல நாவலாசிரியரும் வெளியீட்டாளருமான 'இதயம்பேசுகிறது' மணியன், துபாயில், கடும் சோதனைக்குள்ளாஞர். அவர் துபாயில் தங்கியிருந்த வேளை, இலங்கையில் கலவரம் நடைபெற்ற சமயமாகும். உலகப்பத்திரிகை மட்டுமல்லாது துபாயில் வெளியாகும் சகல பத்திரிகைகளும் இலங்கைக் கலவரம், தமிழர்பற்றிச் செய்திகள் வெளியிட்டன. மணியன் தங்கியிருந்த ஹோட்டலில் ஏகப்பட்ட தமிழ் இலக்கிய வாதிகள்.

தேச நலனும், அரசு விசுவாசமுமிக்க துபாய் நாட்டு சி. ஐ. டியினர் தமிழர்ஒருவர், அதுவும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு கோரி துபாய்க்கு வந்திருப்பதாக அரசுக்கு அறிவித்திருந்தனர். இதனுல் அரசின் உத்தரவுக்கமைய, 24 மணிநேரமும் சி. ஐ. டி. யினர் அவரைக் கண்காணிக்கத்தொடங்கினர். பின்னர் மணியன், தன்னை ஓர் இந்தியர் என அவர்களுக்கு பூரண விளக்கமளித்தார்.

# வடக்கில் உள்ளி விளையுமா?

எமது வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் செம்மண் நிலங்களில் உண்டு பண்ண முடியாத பயிர் இல்லை என்றே சொல்லலாம். உருளைக்கிழங்கு, கொடி முந்திரிகை வடமாகாண மக்களுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றன.

இவற்ருல் பலகோடி ரூபாய் செலாவணி மிகுதப்படுத்தப் படுகின்றது. அதேபோல் வெள்ளைப் பூடையும் ஏன் எமது விவசாயிகள் பயிரிடமுடியாது? பயன்பெற முடியாது?

உணவுப் பயிர், உபஉணவுப் பயிர் உற்பத்தியில் நமது விவசாயிகள் சமர்த்தர்கள். தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் உள்ளிப்பூடு இரண்டறக்கலந்திருக்கிறது. உற்பத்தித் திட்டம் வெற்றியளித்தால் அது வடமாகாணத்திற்குப் பெருமையையும் நாட்டிற்குச் செலாவணியையும் தேடித்தரும் என்பது வெள்ளிடைமலை.

க. கனகராசா,
[ச. நீ.]


## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சிட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

## குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகளுக்கும்

CROSS TRAVEL
SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA
PHONE: 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 10,000/- ஒரு வழி பயணச்சீட்டு.

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

நகல் படிவங்களை,
1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3. சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?

Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-
1. Minolta PPC Photo Copier Model EP 300 78,590-00
2. Minolta PPC Photo Copier Model 300 RE 88,600-00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குரேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குரேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்)
படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக்கூடிய இடம்

குரேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்

# ஏட்டுச்சுரைக்காய் எதற்கும் உதவாது!

அந்தக் காலத்திலே கண்டியில் கதலி வாழைப்பழம் ஒரு சதம். ஆகக்கூடினுல் இரண்டு சதம். கல்வி அதிகாரி ஒருவர் கண்டியில் ஒரு கல்லூரிக்கு விஜயம் செய்தார். கணிதம் நடக்கும் வகுப்புக்குள் நுழைகிறுர். 'நான் ஒரு கேள்வி கேட்கிறேன்; கெதியில் பதில் சொல்லுங்கள்' என்கிறுர். நான் சந்தைக்குப் போய் 100 பழமுள்ள வாழைக்குலையை ஆறு ரூபாய்க்கு வாங்கினுல் ஒரு பழத்தின் விலைஎன்ன'வென்று கேட்டார். 'பக்' என்று எல்லாப் பிள்ளைகளும் சிரித்தார்கள். அதிகாரிக்குக் கோபம் வந்துவிட்டது. ஏனென்று வினவினுர். துணிந்த பையனெருவன் 'அப்படிப்பட்ட வாழைக்குலை கண்டிச் சந்தையில் இல்லைஐயா' என்றுன். அதிகாரி தலைகுனிந்தார். கணக்கில் பிழையொன்றுமில்லை. ஆனுல் அன்றுட வாழ்க்கையில் நடக்கிற சம்பவமல்ல.

இது போன்ற கேள்விகளைக் கேட்டால் பிள்ளைகள் ஏட்டுச் சுரைக்காய் முறையில் பயின்று தங்களுக்கும் சமுதாயத்திற்கும் அவ்வளவு பயன் அளிக்கக் கூடியவர்களாய் வரமாட்டார்கள்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் இதுபற்றி ஒரு சிறந்த உதாரணம் கூறினுர். ஒரு பண்டிதரும் சிலரும் கங்கைநதியை ஒரு வள்ளத்தில் கடக்கவிருந்தார்கள். போகும் வழியில் பண்டிதர் தனக்கு வேதங்கள் தெரியும்; உபநிஷதம், மனுசாத்திரமெல்லாம் தெரியுமென்று வீம்பு பேசினுர். நடு ஆற்றில் ஒரு புயல்வந்து வள்ளம் புரண்டது. இருந்த மக்கள் கூறினுர்கள் 'எங்களுக்கு வேதம், உபநிஷதம் தெரியாது; ஆனுல்நீந்தத் தெரியும்' என்று. நீந்தித் தப்பிவிட்டார்கள். ஆனுல் ஆற்றைக் கடக்கும் பொழுது முக்கியமாகத் தேவையான நீச்சல் பண்டிதருக்குத் தெரியாது. அவர் தண்ணீரில் மூழ்கினுர். இதிலிருந்து என்ன தெரிகிறதென்ருல் வாழ்வில் எவ்விஷயத்திலும் கொண்டு செலுத்தக்கூடிய நடைமுறையை (practical approach) பரீட்சித்து அதன்படி நடந்தால் பண்டிதருக்கு நடந்த கதி எங்களுக்கு நடக்காது. பண்டிதர் வேதம், உபநிஷதம் படித்ததோடு நின்றுவிடாமல் நீச்சலும் பழகியிருக்க வேண்டும்.

இதைக் கையாள்வதற்கு கூர்மையான அவதானம் (Keen observation) வேண்டும். எமது

## வேதம் உபநிஷதம் படித்தால் மட்டும் போதாது நீந்தவும் தெரிந்திருக்க வேண்டும்!

தாயார் அடிக்கடி கூறுவார், ''முறையாக நான் இளமையில் கல்வி கற்கவில்லை; ஆனுல் அட்டைக்கு எத்தனை காலிருக்கிறதென்று சொல்லுவேன்'' என்று. இதனுல் நான் இளமை தொட்டு என்ன விஷயத்தையும் கூர்மையாக அவதானித்து அதனுல் வரக்கூடியநல்லபயனை வாழ்க்கையில் நடைமுறைப் படுத்திவிடுவேன். இம்முறை எனக்குப் பயன் கொடுத்தது; கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதை எனக்கு வயது குறைந்தவர்களுக்கு ஒரு புத்திமதியாய்க் கூறுகிறேன்.

நாம் பொது மக்களைக்கூட அவதானித்துப் பயன் அடையலாம். ஒரு சாதாரண வன்னி விவசாயியிடமிருந்து ஒரு மெச்சத்தக்க கொள்கையை அவதானித்தேன். ஒருமுறை நான் வவனியா அரசாங்க அதிபராயிருந்தபொழுது அக்காலத்துப் பாராளுமன்ற அங்கத்தவராகிய பெரியார் சுந்தரலிங்கத்துடனும் சில விவசாயிகளுடனும் உரையாடிக் கொண்டிருந்தேன். அந்தச்சமயம் திரு. சுந்தரலிங்கம் தான் எப்படிப் புதிய கல்வி மசோதாவின் குறைகளைப்பற்றிப்பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டி ஒரு பெரு வெற்றி பெற்ருரெனக் கூறினுர். கேட்டுக் கொண்டிருந்த ஒரு விவசாயி ''ஐயா, நீங்கள் இப்படி மசோதாவைப் பற்றி முழங்கினதால் வன்னி மக்களாகிய எங்களுக்கு என்ன பயன்'' என்ருர். அப்பொழுது நானும் விவசாயியுடன் சேர்ந்து, ''இம்மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய சொற்பொழிவுகளை நிகழ்த்துங்களேன். எவ்வளவு பொதுமக்களுடன் சேர்ந்து வாழ்கிருேமோ அவ்வளவுக்குப் பயன்தரக்கூடிய எண்ணங்கள் எங்கள் மனதில் உதித்துப் பயன்தரக் கூடிய செயல்கள் செய்வோம். என்றேன்.''

நாங்கள் எந்தக் கருமத்தையும் செய்யும் பொழுது ஒரு நோக்கம் (objecitve) வைத்திருக்க வேண்டும். அதற்கேற்றதாக அலுவல்கள் செய்ய வேண்டும். பல ஆண்டுகளுக்குமுன் ஜப்பானுக்கு நான் போயிருந்தபொழுது ஒரு தொழிலதிபரைச் சந்தித்துப்பயனுள்ள சம்பாஷணை நடத்தினேன். அவர் கூறினுர் ''ஒரு தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால் அதன் முக்கியம் யந்திரங்களே(machinery). என்ன பொருளை உற்பத்தி செய்யப் போகிருேமோ அதற்குகந்த யந்திரமே முதற் தேவை (first priority). யந்திரத்திற்கே நூற்றுக்கு அறுபது எழுபது வீதம் ஆரம்பத்தில் செலவழிக்க வேண்டும். யந்திரங்கள் வெயில் மழை படாமல் இருப்பதற்கு ஏதோ கட்டிடங்கள் தேவை. ஆனுல் கட்டிடங்களில் அதிக பணம் செலவு செய்யப்படாது. சில நாடுகள் அனுவசியமாக யந்திரத்தில் கூட முதலீடு செய்யாமல் கட்டிடங்களில் முதலீடு செய்து இலாபகரமாகத் தொழிற்சாலையை நடாத்தக் கஷ்டப்படுகிருர்கள்'' என்று குறிப்பிட்டார். இது போன்ற அறிவுரைகளை நாம் வாழ்க்கையில் பல விதத்தில் உபயோகித்துப் பயன் அடையலாம். இந்த அறிவு தனி நூல்களிலிருந்து பெறமுடியாது. அனுபவத்தால்தான் பெறலாம். இதற்கு அவதானமும் மற்றவர்களிடமிருந்து அறிவைப் பெறவேண்டும் என்ற மனப்பான்மையும் வேண்டும். இப்படிப்பட்ட மனப்பான்மை ஏற்படுவதற்கு 'நான் ஒரு மாணவன்; எப்பொழுதும்படிக்கத்தயார்; தெரியாததைக் கேட்க வெட்கப்படமாட்டேன்; உலகத்தில் எனக்குத் தெரியாதது பல இருக்கின்றன' என்று உணர வேண்டும். இந்த மனப்பான்மை எங்கள் மத்தியில் இருக்கின்றது. எதிர்காலத்திலும் இதைப் பேணிக்காக்க வேண்டும். இந்தப் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவரிலும் தங்கியிருக்கிறது.

உலகிலே சிறந்த நூல் நிலையத்திலுள்ள நூல்கள் எல்லாவற்றையும் வாசித்தபிறகும் ஒருவர் அறிவிலியாயிருக்கலாம் என்றெருருவர் சில ஆண்டுகளுக்கு முன் கூறினுர். இதில் எவ்வளவோ உண்மையுண்டு. தனி வாசிப்பிலும் பார்க்க வாசிப்பதில் எவ்வளவை நாம் உட்கொள்கிருேமென்பது தான் முக்கியம். உட்கொள்வதில் எவ்வளவைப் பயனளிக்கக் கூடிய முறையில் கையாளுகிருேமோ அது இன்னும் முக்கியம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதை மனதில் வைத்துக் கொண்டு, 'எங்களுக்குக் கலகலப்பு வேண்டாம் பலகாரம் தான் தேவை; விளம்பரம் தேயைில்லை; பயனுள்ள செயல்கள் தான் தேவை'யென்று மன உறுதியுடன் எதிர்காலத்தை நோக்குவோமாக. அப்பொழுதுசமுதாயத்திற்கு ஆக்கபூர்வமானகருமங்களைச் செய்து முன்னேறுவோம்.

நா. மாணிக்கஇடைக்காடர்

கென்வூட் சமயலறை உபகரணங்கள்

KENWOOD FOR KITCHENS

THORN EMI




UE

SOLE AGENTS
united electricals limited
60, Park Street, COLOMBO.2 PHONE:26696-27677

SHOP No 3, 3rd Floor Duty Free Complex Galle rd COLOMBO 3

வடபிரதேச விற்பனையாளர்கள்:
★ பி. சோமசுந்தரம் அன் கம்பெனி,
293, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 23340
★ எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்,
39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (9650)

### பிரெளணி

(6-ம் பக்கத் தொடர்ச்சி )

'போ போ' இது என் சாப்பாடு' என்றது தாய். 'ஐயோ பசிக்கிறதே என் வீடு பூட்டிக் கிடக்கிறதே' என்று இரந்தது பிள்ளை.

பிரெளணியின் கெஞ்சுதலை ரேுஸ்ஸியின் இருதயம் சட்டைசெய்ய மறுத்தது. பசிக்கொடுமையால் பிரெளணி அங்கிருந்து விலகுவதற்கு மறுத்தது.

'வாள் வாள்... வாள் வாள்...'

'வாள் வாள்... வாள் வாள்...'

பிரளய சப்தம் பொறுக்காமல் எஜமானி வெளியே வந்து 'சூ சூ' என்கிறுள்.

அவள் எழுப்பிய சப்தம் அவற்றின் செவிப்பறைகளுக்கு எட்டாமலே காற்றிலே கலந்தன.

ஆயினும் சற்றைக்கெல்லாம் சண்டை தானுகவே ஓய்ந்து 'தாய்மை' வென்றது. பிரெளணி வலி பொறுக்க முடியாமல் குளறிய படியே தன் வீட்டுக்கு மூன்று காலில் ஓடிக் கொண்டிருந்தது. ஆத்திர உணர்ச்சி இன்னமும் அடங்காத தன் எதிரொலியான ஒருவித முனகலுடன் ரேுஸ்ஸி வாலை ஆட்டியபடி தன் கோப்பையை நக்கிக் கொண்டிருந்தது. சோற்றையெல்லாம் காகங்கள் தின்று முடித்திருந்தன.

### சர்க்கஸில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்குக் கட்டளைகளைப் பிறப்பிக்கலானுள்.

''அக்பர், இங்கே வா! நில்! இந்த வளையத்திற்குள் பாய்ந்து செல்!''

அக்பர் புதிய உற்சாகத்தோடும் பெரும் வலிமையோடும் பாய்ந்தது. தீ கொழுந்துவிட்டெரியும் பல வளையங்களுக்கூடாக ஆனந்தமாகப் பாய்ந்து வந்தது.

இன்று ஓூசி வளர்ந்த யெளவன மங்கை. இப்போது அக்பர் மட்டுமல்ல, எத்தனையோ புலிகள் அவள்சொற் கேட்டு நடக்கின்றன.

நன்றி: 'சோவியத்நாடு'

# கிடுகு வேலி

## செங்கை ஆழியான்

தரன்ஸ்

மேகக் கூட்டங்களிடையே அவற்றைச் சீராகக் கீறிக் கிழித்துக் கொண்டு பறக்கின்ற ஜெட்விமானத்தின் வேகம் காணுதுபோலப் படுகின்றது. இன்னும் அரைமணி நேரத்தில் விமானம் அவன் தாய்நாட்டில் தரிக்கப் போகின்றது.

நீண்ட ஐந்து ஆண்டுகள்- பிறந்த மண்ணையும் குடும்பத்தையும் விட்டு வெளிநாட்டில் உழைப்பிற்காகக் கழித்த ஐந்தாண்டுகள் தனிமையும் ஏக்கமும் நிறைந்தவை.

இன்னும் அரைமணி நேரம்தான். ஐந்தாண்டுகளின் தனிமையிலும் இந்த அரைமணிநேரம் கொடூரமானது. சீற்றில் இருப்புக் கொள்ளவில்லை. கடிகாரத்தைப் பார்த்தான்.

எலெக்ரோனிக் சீக்கோ துல்லியமாக நேரத்தைக் காட்டியது.

அதிகாலை, 2-15.

அவன் வியப்புடன் விமானத்தின் யன்னலூடாக வெளியில் பார்த்தான். வானம் வெளுத்திருந்தது. வானத்தில் மின்னிய நட்சத்திரங்கள் எங்கோ ஓடி மறைந்திருந்தன. அமைதியின் மோனத்தில் அலையெறிந்து கிடந்த கீற்று முகில்களூடே ஒளிக்கதிர்கள் பரவத் தொடங்கியிருந்தன!

சீக்கோ தவருக நேரத்தைக் காட்டுகின்றதோ?

விமானத்தில் மின்னிமின்னி நேரத்தைக் காட்டும் எலெக்ரோனிக் கடிகாரத்தைப் பார்த்தான். அதில் ஸரான்டட் ரைம் என்ற பகுதியில் நேரம் காலை 5-15 எனத்தெரிந்தது. அவன் தன் தவறினைப் புரிந்து கொண்டான். அவன் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பயணம் செய்கிருன். அவன் புறப்பட்ட இடத்தின் நேரத்தை அவன் கடிகாரம் காட்டுகின்றது. இலங்கையின் நியமநேரம் குவைத்தின் நியமநேரத்திலும் 3 மணி பிந்தியது.

முதலில் சூரிய உதயத்தைக் காண்பது அவன் நாடு.

அவன் கடிகாரத்தின் நேரத்தைச் சரிசெய்து கொண்டான்.

## ● தொடர் நவீனம்

இப்போது நிர்மலா என்ன செய்வாள்? குழந்தை ரமணன் என்ன செய்து கொண்டிருப்பான்? இருவரும் நல்ல உறக்கத்தில் இருப்பார்களோ?

நிர்மலாவிற்கு எப்படி உறக்கம் வரும்? கலியாணமாகி மூன்றும் மாதம் அவன் உழைப்பிற்காக வெளிநாட்டிற்குச் சென்ருன். அப்போது ரமணன் வயிற்றில். அவள், அவன் வெளிநாட்டிற்குப் புறப்பட்டபோது கண்ணீராகச் சொரிந்தாள்.

''நீங்கள் வெளிநாட்டிற்குப் போகத்தான் வேண்டுமா? இங்கேயே நல்ல உத்தியோகம் பார்க்கிறியள். அந்த வேலையை வீணு ரிசைன் பண்ணிவிட்டுப் போகிறன் என்கிறியள்...''

அவன் அவளைத் தேற்றினுன்.

''இப்ப உழைக்க வேண்டும் நிர்மலா. இங்க இருந்தால் சீவிக்கலாம். உழைக்கேலாது... மிடில்ஈஸ்ரிற்குப் போய் ஒரு ரெண்டு வரியம் இருந்திட்டு வந்தால் பின்னர் சீவியம் முழுவதும் உழைக்கத் தேவையில்லை...''

அவள் அமைதியடையவில்லை.

''எல்லாரும் கலியாணம் செய்யிறது வாழ்கிறதுக்கு... உழைக்கிறதுக்கில்லை. நாங்க சந்தோஷமாக வாழ வேண்டிய வயதிலே உழைக்க வேண்டும் என்கிறியள். கலியாணம் கட்டி மூன்று மாசம்கூட ஆகவில்லை. அதற்குள் பிரிகிறன் என்கிறியள்...''

''எனக்கு மட்டும் உன்னைப் பிரிந்து போறது விருப்பமே, நிர்மலா? ஆனுல் உனக்குத் தெரியும்... என்னை நம்பி ரெண்டு தங்கச்சியள் இருக்கிறது... அதுகளுக்கு நான் ஏதாவது செய்யாவிட்டால் அதுகளின்ர கதி? எண்ணிப் பார் நிர்மலா?..''

அவள் அவனைக் கண்ணீருடன் பார்த்தாள். அவள் விழிகளில் தேங்கிய உணர்வை எப்படி விபரிப்பது? ஆத்திரமா? கவலையா?

''தங்கச்சியளுக்குத்தான் என்னைக் கலியாணம் செய்யேக்க ஒரு லட்சம் டொனேசன் வாங்கினியள். அப்பா உங்களுக்கு ஒரு லட்சம் தந்தது நாங்க வாழுகிறதுக்கு. நீங்கள் அப்படியே அந்தக் காசைக் கொண்டு மூத்த தங்கச்சியின்ர கலியாணத்தை முடிச்சியள். நான் ஏதாவது கேட்டேனு? இப்ப மற்றத் தங்கச்சிமாருக்காக உழைக்கப் போறன் என்கிறியள். என்னைப்பற்றிக் கொஞ்சமாவது நீங்கள் யோசித்துப் பார்த்தியளா? நானும் நீங்களும் என்ன வாழ்ந்து முடிச்சவங்களா? என்னை வாழாவெட்டியாக விட்டிட்டு நீங்கள் போகப் போறியள்...''

நிர்மலாவின் ஏக்கம் அவனுக்குப் புரிந்தது. அவளைப் பிரிவதில் அவனுக்கும் கலக்கம்தான். மூன்று மாதங்களில் இப்படிப் பிரிவு வரும் என அவன் எதிர்பார்க்கவில்லை. பத்துப் பன்னிரண்டு மாதங்களுக்குப் பின்னர்தான் வேலைவாய்ப்புக் கிடைக்குமெனக் கூறிய ஏஜன்சிக்காரன், உடன் புறப்படு எனத் தந்தியடிப்பான் என யார் எதிர்பார்த்தார்கள். மறுக்க முடியாது. சுளையாக அவனிடம் இருபதினுயிரம் கட்டியாகி விட்டது.

அவன் தங்கையின் வாழ்விற்காக அவன் போயாகத்தான் வேண்டும்.

''உங்கள் தம்பியிருக்கிருர்தானே? அவரை அனுப்புங்கள்...'' என்ருள் நிர்மலா. அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''நான் எலெக்ரிக்கல் போர்மன்... அதனுல எனக்கு அங்க உடனே வேலை கிடைக்கிறது. தம்பி பூபாலன் சின்னப் பிள்ளை. படிக்கிறவன். ஏ. எல். எடுக்கப் போறவன்''

''அதற்காக... பூபாலன் இனிக் குடும்பப் பொறுப்பை எடுக்கட்டுமே..''

அவன் அவளைக் கவலையோடு பார்த்தான்.

''நீங்கள் இன்னமும் உழைத்துத் தங்கச்சிமாருக்குக் கொடுக்கிறது எனக்கு விருப்பமில்லை. நீங்கள் உழைக்கிறது காணும்... நீங்கள் போக வேண்டாம்...'' என்று பெருங்குரலில் அவள் அழுதாள். அவள் அழுகை அவன் நெஞ்சத்தைப் பிழிந்தது.

இளமையின் கனவுகள் அனுபவித்து முடியாத பருவம். மூன்று மாதங்கள் ஒரு முழுமையான வாழ்வா?

''பிளீஸ் நிர்மலா...அழாதையும்... இரண்டு வரியம்தான். ஓடி வந்திடுவன். பிறகு உன்னைவிட்டு ஒருகணமும் பிரியமாட்டன்... சத்தியம்...பிளீஸ்...''

''இரண்டு வரியம் கழித்துக் கலியாணம் செய்திருக்கலாம்... குடும்பச்சுமை உள்ளவை பாரங்களை இறக்கி வைத்துவிட்டுத்தான் கலியாணம் செய்ய வேண்டும். உங்கட தங்கச்சிமார் வாழ்கிறதுக்காக என்ர வாழ்வை நான் பாழாக்க விரும்பவில்லை. போகாதையுங்கோ...''

அவள் பிடிவாதம் அவனுக்குச் சற்று வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. அவனுடைய ஈகோவிற்கு அவள் வார்த்தைகள் அடிபோடுவதாகவிருந்தன. சீதனம் தந்துதான் உங்களை வாங்கினுர் என் அப்பா; அப்படியிருக்க நீங்கள் எப்படிப் போகலாம் என்கிருளா?

அப்படியிருக்காது. மூன்று மாதங்களாகத் தன்மீது அன்பையும் காதலையும் சுரந்த நிர்மலா அப்படியிருக்கமாட்டாள்.

அவன் குழந்தையை வயிற்றில் தாங்கி நிற்கும் அவள் அப்படி இருக்கமாட்டாள். அவளால் என் பிரிவைத் தாங்க முடியவில்லை.

விமானம் கீழே இறங்கப் போவதற்கான அறிவித்தல் ஒலித்தது. இடுப்பில் பட்டியை மாட்டிக் கொண்டான்.

இன்னும் ஒருசில நிமிடங்களில் அவன் தன் குடும்பத்தைச் சந்திக்கப் போகிருன். நிர்மலா ஏயர்போட்டிற்கு வந்திருப்பாள். ஓ... அவன் மகன் ரமணனும் வந்திருப்பான். அவன் எப்படியிருப்பான். புகைப்படத்தில் பார்த்தமுகம். அழகாகத்தான் இருந்தான். அவனை அப்பா என அடையாளம் கண்டு கொள்வானே? ஐந்து ஆண்டுகள் எங்கோ இருந்த அப்பாவை அவன் திடீரென அடையாளம் கண்டு அவனுடன் அணைவானே?

நிர்லமா, இனி உங்களை ஒருபோதும் பிரியமாட்டேன். குழந்தையின் மழலைகேட்டு வாழ்ந்திருக்க வேண்டிய இனிய வேளைகளை அவன் இழந்துவிட்டான். பெரும் இழப்புத்தான்.

அவன் மட்டுந்தான் அப்பாக்கியத்தை இழந்தவனல்லன். இன்று யாழ்ப்பாண மண்ணின் புதல்வர்கள் எத்தனைபேர் தங்கள் மனைவி மக்களைப்பிரிந்து மத்தியகிழக்கின்வறள்தரையில் உழைக்கின்ருர்கள். உழைப்பு ஒன்றிற்காக வாழ்வில் சுவைக்க வேண்டிய காலகட்டத்தை இழந்து கொண்டிருக்கிருர்கள்.

(14-ம் பக்கம் பார்க்க)

## பாரதி இன்று இருந்தால்...

நமது பாரத தேசத்தின் பாட்டனுர் வழிவந்த பாரதி பெண்கள் விடுதலைக்காக, பெண் அடிமைத்தனத்திற்கு எதிராகப்போராடினுர். ஆணுக்குப் போல் பெண்ணுக்கும் சமஉரிமை வேண்டுமென அவர் பாடிய கவிதைகள் எத்தனையோ. எனவேதான், தாம் வணங்கும் தெய்வதைப் பெண்வடிவாக, சக்தியாக, கலைமகளாக, அலைமகளாக நினைத்துப்பாரதி பாடினுர்.

அவர் கனவு வீண் போகவில்லை.

இன்று பெண்கள் பல துறைகளிலும் முன்னேறி ஆண்களுக்கு சரிசமமாகப் பணிபுரிகின்ருர்கள். அதே சமயம் அன்று பெண்களுக்கு ஆண்கள் வைத்திருந்த மதிப்பு மரியாதை இன்று இல்லை. ஏனென்ருல், ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பங்குகொள்வதே காரணம். தெருவிலோ, பஸ்ஸிலோ, பொதுஇடங்களிலோ பெண்களை மரியாதையாகக் கருதி நடந்த ஆண்கள் இன்று 'சோஷியல்' என்ற போர்வையில் தொட்டுப் பழகும் நிலை வந்துவிட்டது.

அது மட்டுமா? நாகரிகப் போர்வையில் நமது பெண்கள் பாரம்பரியப் பண்பாடுகளுக்கு நேர்விரோத நடை, உடை, பாவனைகளை மேற்கொண்டு தலைவிரிகோலமாகத் திரிவதை நாம் காண்கிருேம். பெண் குலத்திற்கே இது பெரிய அவமானம். உண்மையில் பெண் விடுதலைக்கு வித்திட்ட பாரதி இன்றிருந்தால் பெண் விடுதலைக்கும், பெண் அடிமைக்கும் பாடிய கவிதைகளைத்தீமூட்டி எரித்திருப்பாரோ.

'பிலோராம்சந்த்'

## பலவான் நிலையில்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கஸ்ட்ரோ அண்மையில் அமெரிக்கப் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டமையும் இங்கு நினைவுகூரத் தக்கது.

கிரெனடாவில் கிடைத்த வெற்றி 'ருசி' நிக்கரகுவா, எல்-ஸல்வடோர் போன்ற நாடுகளின்மீதும் நேரடியாகக் கைவைக்க வாஷிங்டனுக்கு ஊக்கத்தை அளிக்கலாம். ஆனுல் பலவான் நிலையிலிருந்து பிரச்னைகளை அணுகுவது நஷ்டத்தையும் நாசத்தையுமே கொண்டுவரும் என்பதை வியத்நாம் புகட்டிய பாடத்திலிருந்தாவது வல்லரசுகள் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

உங்கள் முதலீட்டிற்கு SHABRA நாடுங்கள்!

உங்கள் பணம் 'ஷப்ரு'வில் பாதுகாப்பாக இருப்பது மட்டுமன்றி அதியுயர் வட்டியையும் நீங்கள் பெறலாம்.
கம்பனிப் பங்குகள் போன்று சந்தையில் ஏற்படும் மாற்றங்களாலும் அரசியல் மாற்றங்களாலும் உங்கள் முதலீடுகள் பாதிக்கப்படுவதில்லை.

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு – 4.
தொலைபேசி இல: 589310.

UNICO FINANCE LIMITED

நிதி ரீதியான உதவிகள்:-

ரி. வி., குளிர்சாதனப் பெட்டி, தட்டச்சு, மின்விசிறி, துவிச்சக்கரவண்டி, மோட்டார் வண்டி, மோட்டார்ப் படகுகள், இயந்திரப் படகுகள் மற்றும் மின்சார சமையல் உபகரணங்கள் முதயவற்றை எம்மிடம் சுலபமான தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும்:-

யாழ். குடாநாட்டில் எப் பகுதியிலேனும் வீடுகள், காணிகள், தோட்டங்கள், விற்பனைக்கு இருந்தாலோ அன்றி தேவைப்பட்டாலோ உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22073

# கிடுகுவேலி

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் வாழ்வின் ஒரு பகுதியைத் தியாகம் செய்து தான் அவர்கள் பணத்தை உழைக்க முடிகிறது.

குடும்பத்தைப் பிரிந்திருப்பது போன்ற கொடுமை வேறொன்றும் இருக்க முடியாது என்பதை அவன் உணர்ந்திருக்கிறான். வெளிநாட்டில் இருக்கும்போதுதான் பிறந்த மண்ணின் பெருமையும் தெரிகிறது. அவன் கிராமத்தின் மதகு, ஆலமரத்தடி வாசிகசாலை, விசர் அந்தோனிக்கிழவன், மருதனை மடசந்தி, அவன் நண்பர்கள் எல்லாம் எவ்வளவு உயர்ந்தவர்? ஏயர்கொண்டிசன் அறையில் இருந்து ரி. வி. பார்ப்பது என்ன பெரிய சுகம்? சயிக்கிலில் ஏறி மண் ஒழுங்கையில் ஓடி, மதகில் ஏறி உட்கார்ந்து, நண்பர்களுடன் அரட்டை அடித்து, கீரிமலைக்குச் சென்று... கூவில் கள் குடித்து... ஓ... எவ்வளவு இனிய நாடு.

நிர்மலா வந்திருப்பாள். ரமணன் வந்திருப்பான். பூபாலன்தான் கூட்டிவந்திருப்பான். அவர்களுக்காக நான் கொண்டு வந்திருக்கும் பொருட்களைப் பார்த்ததும் வியப்படைந்துவிடுவார்கள். ரமணனுக்காக அவன் எத்தனை வகையான விளையாட்டுச் சமான்களைக் கொண்டுவந்திருக்கிறான்?

விருந்தையில் ஒரு புகையிரத அமைப்பை உருவாக்கலாம். வேகமாக விரையும் செரிப் கார்கள். கதவு திறந்து மூடி மேலெழும் விமானம். றம் அடிக்கும் கரடி. ஸ்ரார் வார் யந்திர மனிதர்கள். இப்படிப் பல...

நிர்மலாவிற்கு வகைவகையான சாரிகள்... அம்மாவிற்கு மிக்சிசெற்... தங்கச்சிமாருக்கு ரி. வி. பூபாலனுக்கு வீடியோ டெக்... சீச்சி... அவனுக்கு திரிஇன்வண் போதும்... டெக் எனக்கு... தேவையென்றால் அவர்களும் போட்டுப்பார்க்கட்டும்

விமானம் இறங்கியது.

இப்போது ஐயா எழுந்திருப்பார். வீட்டுக் குந்தில் அமர்ந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டிருப்பார். இரண்டு அறைகளும் தலைவாசலும் கொண்ட பழைய வீடு அவர்களுடையது. அது ஐயாவின் முதிசம். அவன் வெளிநாட்டிற்குச் சென்று உழைத்து அனுப்பிய பணத்தில், அந்த வீட்டிற்கு அருகில் புதியதொரு சிறிய கல்வீடு கட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் ஐயா அந்த வீட்டிற்குச் செல்ல மறுத்துவிட்டார். அதே பழைய தலைவாசலில்தான் அவர் சீவியம்.

''இதுவே எனக்குப் போதும்...'' என்பது அவர் வாதம் என அம்மா எழுதியிருந்தாள்.

அம்மாவும் தங்கைகளும் தம்பியும் புதிய வீட்டில்தான்.

''அந்த மண்தரையில், மழை ஒழுக்கில் வாழ்ந்தது போதும். கொஞ்ச நாளாவது என்ர ராசா கட்டித்தந்த வீட்டில் வாழுவம்...'' என்று அம்மா எழுதியிருந்தாள். கல்வீடு அவர்களுக்குக் கிடைக்க முடியாத கனவாகத்தான் இருந்தது. சாணத்தால் மெழுகிய தரையில் பனையோலைப் பாயில் தான் நாங்கள் படுத்தோம். மழை பெய்தால் ஒழுகும். நிலம் சேறுகும். அவற்றிடையேதான் அவர்கள் வளர்ந்தனர்.

எதிர்வீட்டின் கண்ணாடி யன்னல்களும் பளபளப்பான கதவுகளும் பொலிஷ்பண்ணப்பட்ட தரையும் அவர்களுக்கு வியப்பைத் தந்தன. அவ்வீட்டின் வாசலில் கால்களைப் பதிக்கவே அவர்கள் கூசினார்கள்.

அப்படி ஒரு வீட்டில் வாழமாட்டோமா என்று ஏங்கிய காலம் இருந்தது. ஐயா, ஒரு சுருட்டுத் தொழிலாளி. அவரால் மாதம் முன்னூறு அல்லது நானூறுதான் உழைக்க முடிந்தது. அவரின் கள்ளுச் செலவு போக மிகுதியை அம்மாவிடம் கொடுத்துவிடுவார். அம்மாவின் கெட்டித்தனத்தால்தான் அவர்கள் உயிரோடு சீவிக்க முடிந்தது. அம்மாவின் வழியில் சேர்ந்த பத்துப்பரப்புப் பனங்காணி அவர்களுக்குப் பட்டினி கிடக்க விடாது பாதுகாத்தது.

அவன்தான் குடும்பத்தில் மூத்தவன். அவன் மட்டும் ஒரு பிள்ளையாக இருந்தபோது குடும்பத்தில் கஷ்டம் இருக்கவில்லை என்பாள் அம்மா. மூன்றுதங்கைகள் பிறந்தனர். கடைசியாக ஒரு தம்பியும் பிறந்தான்.

குடும்பத்தில் சிரமங்கள் தோன்றின. செலவுகள் வருமானத்திற்கு அதிகமாயின் சிரமமில்லாமல் வேறு எப்படியிருக்கும். எப்படியோ வளர்ந்துவிட்டார்கள். தங்கைகளில் ஒருத்திக்குக் கல்யாணமுமாகிவிட்டது.

இருவர் குமருகளாக வீட்டில் இருக்கிறார்கள். தம்பி ஏ. எல். படித்துவிட்டு சும்மா இருக்கிறான். அவன் இந்த நாட்டில் உழைக்க வழியில்லாமல் வெளிநாட்டிற்குச் சென்று வருகிறான்.

வீட்டில் இன்று ஒரே கும்மாளமாக இருக்கும். தங்கச்சி கிளி மகிழ்ச்சியில் குதிப்பாள். அவள் விரும்பிய மச்சான் சீராளனையே அவளுக்குக் கட்டிவைத்துவிட வேண்டும். சீராளனுக்கும் அவளில் விருப்பம்தான். ஆனால், அவன் தங்கைக்கு டொனேசன் வாங்காது ஒரு வழியில் இறங்க முடியவில்லை.

செல்வம் எப்படியிருப்பாள்? நன்றாக வளர்ந்திருப்பாள்.

சுங்கப் பரிசோதனைகள் முடிந்து அவன் வெளியில் வந்தான். அவன் கண்கள் ஆவலுடன் மண்டபத்தில் தேடின.

அவனைக் கண்ட பூபாலன் விரைந்து வந்தான்.

''நிர்மலா வரவில்லையா?... ரமணன் .?'' தொண்டைக்குள் ஏதோ சிக்கிக் கொண்டது போன்ற தவிப்பு.

பூபாலன் 'இல்லை'யெனத் தலையாட்டினான். அவன் இதயத்தில் இதுவரை கொப்பளித்த ஆவல், பாசம் யாவும் அப்படியே உறைந்ததுபோல இருந்தது.

(வளரும்)

## இவ்வாரம் எப்படி?

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அடிசறுக்கலாம். நான் என்ற அகம்பாவத்தை அடக்கவும். வேலைகளில் ஈடுபடுவோர் போற்றப்படுவர்.

### கும்பம்

அறிவுப்பணியில் அதிக ஆர்வம் பிறக்கும். புதிய துப்புக்கள் கிடைக்கலாம். தாய்வழி ஆதரவு அவசியம் கிடைக்கும். ஆணவப்போக்கினால் அடிசறுக்க நேரிடும். சிறிய பூசலுக்கும் இடமேற்படலாம். இதயப்படுதாவில் இன்பக் கூத்து. கற்றதனால் பயன் கைமேல் கிடைக்கும். நுட்பமான

### மீனம்

புத்திர வழியால் புகழுக்கு இடமுண்டு. புதிய பாதையில் நடைபோடுவீர். ஆராய்ச்சியில் அதிக ஆர்வம் பிறக்கும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு. ஆனந்தநிலை. ஆபத்து அருகில் உண்டு. அடுத்துக்கெடுப்பவர் உளர். முன்னெச்சரிக்கை நன்று.

# பலவான் நிலையிலிருந்து பிரச்னைகளை அணுகுவது நாசத்தையே ஏற்படுத்தும்

கரீபியன் தீவான கிரெனடாமீது அமெரிக்கப் படைமள் தொடுத்த ஆக்கிரமிப்பானது அமெரிக்காவின் நேசநாடுகள் உட்பட உலகின் பெரும்பாலான நாடுகளின் கண்டனத்துக்கு இலக்காகியுள்ளது.

அமெரிக்கப் படைகளை உடனடியாக கிரெனடாவிலிருந்து வாபஸ் பெறக்கோரும் ஐ. நா. தீர்மானத்தையும் அமெரிக்கா தனது 'வீட்டோ' ரத்ததிகார உரிமையைப் பிரயோகித்து அர்த்தமற்றதக்ாகியுள்ளது. ஐ. நா. வின் 38 ஆண்டு வரலாற்றில் அமெரிக்கா 'வீட்டோ' ரத்ததிகார உரிமையைப் பயன்படுத்தியது இது 37வதுதடவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மையில் கிரெனடாவில் நடந்த இராணுவ சதிப்புரட்சியைத் தொடர்ந்து, அங்குள்ள ஏறத்தாழ ஆயிரம் அமெரிக்கர்களின் 'பந்தோபஸ்தை உத்தரவாதப்படுத்துவது' என்ற முகாந்திரத்தில் அமெரிக்கா மேற்கொண்ட படையெடுப்பின் உள்நோக்கம் எது என்பதை அறிவது, மத்திய அமெரிக்காவின் அண்மைக்கால நிகழ்வுப் போக்குகளை நெருங்கி அவதானிப்பவர்களுக்கு ஒரு சிரமசாத்தியமான காரியமல்ல.

ஜுலை மாத இறுதியில் கரீபிய, மத்திய அமெரிக்கப் பிரதேசத்தில் அமெரிக்கக் கடற்படை ஹொந்துராய் கடற்படையுடன் இணைந்து கடற்படைப் பிரயோகப் பயிற்சிகளை ஆரம்பித்த தருணத்தில், ஐ. நா.வுக்கான அமெரிக்கப் பிரதிநிதி ஜீன் கேர்க்பட்றிக், ''இந்தக் கடற்படைப் பயிற்சிகள் வழமையானவையோ அன்றி சாதாரணமானவையோ அல்ல'' என்று கூறியிருந்தார். ஏறத்தாழ இதே தருணத்தில் தமது கடமையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அமெரிக்க இராணுவ உயர்பீட முதல்வர் எட்வர்ட் மேயர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''மத்திய அமெரிக்க விவகாரங்களில் இராணுவத் தலையீடு செய்வதானால், அதற்கு இதைவிட உசிதமான சந்தர்ப்பம் எப்போதுமே கிடையாது''.

('டைம்' - ஆகஸ்ட்)

## உலக அரங்கு

பெரி. சன்

கிரெனடாவில் இராணுவ சதிப் புரட்சி நடப்பதற்குப் பல வாரங்களுக்கு முன்பதாகவே பொறுப்புமிக்க இரு அமெரிக்க அதிகாரிகள் கூறிய மேற்படி கூற்றுக்களிலிருந்து மத்திய அமெரிக்காவினுள் பிரவேசிப்பதற்கு வாஷிங்டன் ஏற்கனவே திட்டமிட்டிருந்தது என்பதையும், அதற்கு ஏற்ற ஒரு முகாந்திரத்தை மட்டுமே அது எதிர்பார்த்திருந்தது என்பதையும் ஒருவரால் உணர்ந்து கொள்ள முடியும். கிரெனடாவில் நடைபெற்ற இரணுவ சதிப் புரட்சியானது வாஷிங்டனுக்கு அது எதிர்பார்த்த முகாந்திரத்தை வழங்கியது.

நிக்கரகுவா, எல் - சல்வடோர் ஆகிய நாடுகளின் நடப்புகள் ஏற்கனவே வாஷிங்டனுக்கு ஆத்திரத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருந்தன. ரஷ்ய - கியூப செல்வாக்கின் ஒரு வெளி அரணாக நிக்கரகுவா மாறிவிடும் என்ற பீதியும் வாஷிங்டனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. வாஸ்தவத்தில் மத்திய அமெரிக்கா முழுவதையும், குறிப்பாக, நிக்கரகுவாவை ஒரு புறம் பஸிபிக், அத்திலாந்திக் திசையிலிருந்தும் மறுபுறம் கரீபிய திசையிலிருந்தும் இருமுனைக் கடற்படைத் தாக்குதலால் தன் பிடியினுள் கொண்டு வரும் சாத்தியப்பாடுகளின் பரீட்சார்த்தமாகவே மேற் கூறிய கடற்படைப் பயிற்சிகளை வாஷிங்டன் ஆரம்பித்தது எனவும் சில அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவினது படைபலத்தின் முன்னால் கிரெனடா ஒரு 'சுண்டைக்காய்'. ஆனால், 'சுண்டைக்காய் கால்பணம் சுமை கூலி முக்கால் பணம்' என்ற கதைபோல, கிரெனடா விவகாரம் அமெரிக்காவுக்குச் சர்வதேச அரங்கில் பல தொல்லைகளைத் தோற்றுவிக்கும் என்பதும் வாஸ்வமே. ரஷ்யாவுடனான அரசியல் படைபல போரங்களிலும், ரஷ்ய விரோத பிரசார இயக்கத்திலும் 'ஆப்கானில் ரஷ்யத் தலையீடு' என்ற துரும்புச் சீட்டை வாஷிங்டன் இதுவரை காலமும் முழுமூச்சாகப் பயன்படுத்தி வந்தது. ஆனால் கிரெனடாவில் தான் மேற்கொண்ட ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து, 'ஆப்கான் துரும்புச் சீட்,டினைப் பயன்படுத்துவதில் வாஷிங்டனுக்குத்தயக்க மயக்கங்கள் இருக்கவே செய்யும்.

தவிர, பிரிட்டன் முதலான மேற்கு ஐரோப்பி நாடுகளின் அதிருப்தியையும் கிரெனடா விவகாரத்தின் மூலம் வாஷிங்டன் சம்பாதித்துக் கொண்டுள்ளது. ஜனாதிபதி தேர்தல் நெருங்கி வருகிற சமயத்தில், இவையெல்லாம் ரேகனுக்கு உள்நாட்டிலும் பல சங்கடங்களை ஏற்படுத்த இடமுண்டு.

இவ்வாறான விளைவுகள் ஏற்படும் எனத் தெரிந்து கொண்டும் 'ஆயிரம் அமெரிக்கப் பிரஜைகளுக்காக' சிறிய ஒரு தீவினை ஆக்கிரமிக்கும் அதிசூரத்தனத்தில் ஜனாதிபதி றேகன் இறங்கியிருப்பாரானால் மத்திய அமெரிக்காவில் வாஷிங்டனின் செல்வாக்கிற்குப் பெருஞ் சவால் உருவாகியுள்ளது என்றே அர்த்தம் கொள்ளவேண்டும்.

1973ல் கிரெனடாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமையவே அமெரிக்கா அங்கு படைகளை அனுப்பியதாக ஜனாதிபதி றேகன் கூறியுள்ளார். ஆனால், அமெரிக்கப் படைகளை வருந்தி வரவழைக்க கிரெனடாவில் யார் இருந்திருக்கக் கூடும் என்ற கேள்விக்கு விடைதரும் விதத்தில் தற்போது ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

சமீபத்திய இராணுவ சதிப் புரட்சியில் கொலை செய்யப்பட்ட கிரெனடாப் பிரதமர் மோரிஸ் பிஷப்பினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஸ்கூனின் தலைமையில் ஒரு இடைக்கால அரசாங்கத்தைக் கிரெனடாவில் நிறுவ அமெரிக்கா உத்தேசித்துள்ளது என வெள்ளை மாளிகை அறித்துள்ளது.

மத்திய அமெரிக்காவில் ஆழமாக வேரோடி விட்ட இடதுசாரிச் சித்தாந்தத்தின் செல்வாக்கினை முறியடிக்கும் வாஷிங்டனின் முயற்சி எந்த அளவுக்குச் சித்திக்கும் என்பது கேள்விக்குரிய விஷயாமானாலும் கிரெனடா மீதான அமெரிக்கப் படையெடுப்பு மத்திய அமெரிக்காவில் வல்லரசுகளின் கெடுபிடிகளைத் துவக்கி வைக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

''மத்திய அமெரிக்காவின் மையத்தில் இன்னுமொரு வியத்நாம் உருவாகுவதுகண்டு இக்கண்டத்தைச் சார்ந்த நாடுகளோ அல்லது உலகநாடுகளோ சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை'' என கியூபா முதல்வர் ஃபிடல்

(13-ம் பக்கம் பார்க்க)

## பார்த்தசாரதி

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

விஜயத்தின்போது மௌனமாகவிருந்த தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். தற்போதைய விஜயம் வெற்றியில் முடியும் என்று கூறியிருக்கிறார்.

''இலங்கைத் தமிழர்பிரச்னை சர்வதேசப் பிரச்னையாகிவிட்டது. பார்த்தசாரதியை அழைத்து அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்'' என்று அமைச்சர் தொண்டமான் கூறியதும் —

ஜனாதிபதி ஜயவர்த்தன, பார்த்தசாரதியைப் பேச்சுக்கு அழைத்ததும்-

''இந்தியாவின் நட்பு எமக்கு என்றும் தேவை. அது ஒரு பலம் பொருந்திய நாடு'' என்று அமைச்சர் அல்விஸ் சொன்னதும் -

தீர்வு ஒன்றுக்கு வழிபிறப்பதையே தெளிவாகக் காட்டுவதாயுள்ளது.

இந்தியாவினாலேயே இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்று அகில உலகமுமே நம்பிக் கொண்டிருக்கிறது.

பார்த்தசாரதியின் இந்த இரண்டாம் கட்ட விஜயம் இங்கு வாழும் தமிழ்மக்களுக்கும் தலைவர்களுக்கும் நிம்மதியை ஏற்படுத்துமென்றே நாம் நம்புவோம்.

- குஹன்

## மழை ஏன் பெய்கிறது?.

சிறுமி- ரீச்சர்...மழை ஏன் பெய்கிறது...?

ஆசிரியை- பயிர், புல்,பூண்டுகள் செழிக்க...

சிறுமி- அப்படியென்றால் ஏன் மழை தெருவிலே பெய்கிறது...?

- எஸ். பி. கே.

# தென் லெபனுன்: காரில் பயங்கர குண்டுவெடிப்பு

# 29 இஸ்ரேலியர், 10 அரபுக்கைதிகள் பலி!

பெய்ரூட், நவ. 5

தென் லெபனுனிலுள்ள இஸ்ரேலிய இராணுவஅலுவலகமொன்றின் முன்னல் நேற்றுகாரொன்றில்பயங்கர குண்டுவெடிப்பொன்று நிகழ்ந்தது. இதனல் முப்பத்தொன்பது பேர் கொல்லப்பட்டனர். முப்பத்திரண்டு பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் இருபத்தொன்பதுபேர் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் மிகுதி பத்துப்பேரும் அரபுக் கைதிகள் என்று தெரிவிக்கப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்னர் பெய்ரூட்டில் சர்வதேச சமாதானப்படையைச் சேர்ந்த அமெரிக்க, பிரெஞ்சுத்துருப்புகளை நூற்றுக் கணக்கில் பயங்கர குண்டுவெடிப்புபொன்று பலியெடுத்தது தெரிந்ததே. அதனையடுத்து நிகழ்ந்த இரண்டாவது பெருங்குண்டுவெடிப்பு இதுவென்று தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலியப்படைகள் இக்குண்டுவெடிப்பையடுத்து பூரண உஷார்நிலையடைந்தன குண்டுவெடிப்பு நிகழ்ந்த சில மணி நேரத்தில் இஸ்ரேலிய போர்விமானங்கள் சில கிழக்கு லெபனுனிலுள்ள பாலஸ்தீன கொரில்லா நிலைகள் மீது குண்டுவீச்சு நடத்தின.

பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன இக்குண்டு வெடிப்பைப் பலமாகக்கண்டித்துள்ளன. அமெரிக்க அதிபர் றீகனும் இக்குண்டு வெடிப்புக்குறித்து மிகவும் வேதனையும், ஆத்திரமும் அடைந்துள்ளார். (கி)


**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
**கீழ்வானம் சிவக்கும்**

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
மாலை 6-00 மணி மட்டும்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நம்பியார், சோ நடிக்கும்
**என் அண்ணன்**
புதிய பிரதி ஈஸ்ட்மென்கலர்

**ஹரன்** (யாழ். நகர்)
மாலை 10-30, 2-30, 6-30
சிவாஜி - சாரதா
**என்னைப்போல் ஒருவன்**
(கலர்-புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-ரதி
**புதிய வார்ப்புகள்**
(கலர்-புதிய பிரதி)

**சாந்தி** யாழ்நகர்
Story of The Three Most WANTED!
Out Laws
THE LONG RIDERS
(Action Thrill Colour)

**லிடோ** யாழ் நகர்)
தினசரி
9-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-30
அன்னமிட்டகை
7-11-83 முதல்
36th CHAMBER OF SHAOLIN

**வின்ஸர்** [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-15
கல்யாணகுமார்
முத்துராமன் - தேவிகா
நாகேஷ்
**நெஞ்சில் ஓர் ஆலயம்**
8—9 11.83
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
சாரதா
10-11-83 முதல்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4 30, 7-00
"IT COULD HAPPEN TO YOU"
A film on V. D.
(Strictly for Adults)
This film deals with Sexually Transmitted diseases. Patrons are advised that it contains scenes and subject matter which may be unsuitable for certain sensitive members of the public. EVERY TEENAGER above 18 years must not miss this film.
Next:
CLASH OF THE PITANS
25ந் திகதி முதல்
மூன்றும் பிறை


## வாழ்த்துவோம்

வேலனுருயர் வித்துவான்! வித்தகன்!
விரும்பி நல்லவை கேட்கச் சொன்மாரிதான்
சாலவும் பொழி தண்டமிழ்க் கார்முகில்!
சண்டமாருதம் கம்பன் சுவைதரும்!
ஞாலம் ஒன்றெனக் கண்டிடும் நல்லுள
நண்பன்! இன்றே அறுபதை நண்ணினன்!
சீலம் நோன்பு செறிவு அறிவினும்
சேரச் சேரச் செழித்திட வாழ்த்துவோம்.

– வித்துவான் சி. ஆறுமுகம் –

(வித்துவான் ந. வேலனுக்கு வயது அறுபது.)

## யாருடையது?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு. ஏ. எஸ். நடராசா என்பவர் யாழ். பஸ் நிலைய வயிரவர் கோவிலுக்கருகில் திரு. வீரசாமி ராமலிங்கம் ரெங்கசாமி என்பவருடைய தேசியஅடையாள அட்டையையும், ஏழாலை-மேற்கைச்சேர்ந்த திரு. இ. பொன்னம்பலம் என்பவர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக நடராசா சரோசா என்பவருடைய அடையாள அட்டையையும் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## அகதிகள் முகாமில் குழந்தை மரணம்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் திரு. முத்துச்சாமி தங்கவேலு என்பவரின் இரண்டரை வயதுடைய குழந்தை ஜென்சி சுஜித் சுகயீனம் காரணமாக மரணமானர்.

இதுகைதடி முகாமில் இடம்பெற்ற இரண்டாவது மரணச்சம்பவமாகும்.

## காலணிகள் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

அகதிகள் புனர்வாழ்வு நிதிய நிர்வாகிகள் கைதடி அகதிகள் முகாமிற்கு 314 சோடி காலணிகளையும், 30 பெற்சீட்டுக்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.


அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்... யாழ். நகரில் இதுவே கடைசித் தடவையாக காண்பிக்கப்படும்.
**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-வாணிஸ்ரீ
**வசந்த மாளிகை**
(புதிய பிரதி)

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
திறம்பட நடித்த
வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

## சீன சஞ்சிகைகளும் மார்க்ஸிச நூல்களும்

நவ சீனவின் எல்லா சஞ்சிகைகளுக்கும் 1984-ம் ஆண்டுக்கான சந்தாக்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன ஒவ்வொரு சந்தாதாரருக்கும் அழகிய சீனக் கலண்டர் அன்பளிப்பு உண்டு. சந்தா விண்ணப்பப் படிவங்களுக்கும், மற்றும் மார்க்ஸிச நூல்கள், இலங்கை-இந்திய இலக்கியங்களுக்கும். தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ். புத்தக நிலையம்
(பெற்றோலியக் கூட்டுத்தாபன முன்பாக)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9677


## கேள்விப்பத்திர அறிவித்தல்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையிலுள்ள மலசல கூடங்கள், கான்கள், சாப்பாட்டு அறைகள் அதன் சுற்றுடல் ஆகியவற்றைத் துப்பரவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திர விண்ணப்பங்களை 1983-11-10ம் திகதி பி.ப. 4-00 மணி வரை தொழிற்சாலை ஆளணி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்வதோடு இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை. 1983-10-31.

(9659)


## நல்ல வீடு விற்பனைக்குண்டு

திருநெல்வேலியில் ஒன்றேகால் பரப்பில், நீர் மின்சார வசதிகளுடன், நான்கு அறைகள் கொண்ட நவீன முறையில் அமைக்கப்பட்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு
10/7, சிவன்கோவில் வீதி,
திருநெல்வேலி.

9691


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருதிரோற்காரி ஸூ ஐப்பசி மாதம் 21ம் நாள் (7-11-83) திங்கட்கிழமை பகல் 1-47 தொடக்கம் 2-30 மணிவரையுள்ள மீனலக்கின சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறைச் செல்வன்
**சிவா ஆத்மநாதன்**
(தொழில்நுட்ப அதிகாரி,
நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா)
அவர்கட்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைச்செல்வி
**குமுதா**
அவர்கட்கும்

திருநெல்வேலி அரசடி ஸ்ரீசிவகாமிசுந்தரி அம்பாள் தேவஸ்தானத்தில் திருமணம் நிகழ விருப்பதால் அவ்வமயம் தாங்கள், தங்கள் சுற்றஞ்சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசிர்வதித்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

நா. சிவசிவாபிள்ளையும்
(இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர்)
பாரியாரும்
''கனகஸ்தான்''
566/4, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வ. த. வயித்திலிங்கமும்
(வர்த்தகர்)
பாரியாரும்
''குமுதகிரி''
புலவனூர் லேன்,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(9707)

# தீபாவளி தினத்தில் அசம்பாவிதம் இல்லை!

## யாழ். பொலிஸ் அதிகாரிகள் மகிழ்ச்சி!

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்கள் தீபாவளித்' திருநாளை இம்முறை மிக அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாடினர்கள். தீபாவளித்தினத்தன்று யாழ்ப்பாணத்தின் எப்பகுதியிலும் சிறு அசம்பாவித மெதுவும் நடக்கவில்லை. என்பதை பெருமையுடன் குறிப்பிடுகின்றேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ரி. ஈ. ஆனந்தராஜா தீபாவளித் தினத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் நிலவிய சூழ்நிலை குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்களுக்கு அவர் தமது தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

தீபாவளித் தினத்தில் யாழ். நகரில் அசம்பாவிதம் எதுவும் இடம்பெருமல் யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரி திரு. ரஞ்சித் சில்வா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவரும் யாழ். மாவட்ட மக்கள் தீபாவளித் தினத்தினை அனுஷ்டித்த முறையைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார். (கி)

# கிரனடா விவகாரத்தை விவாதிக்க ஐ. நா. முடிவு!

நியுயோர்க், அக். 5

கிரனடாவில் அமெரிக்க, கரிபியன் படைகளின் ஆக்கிரமிப்பு அங்கு நிலவும் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஐக்கியநாடுகள் சபையில் விவாதிக்கப்படவிருக்கிறது.

மத்திய அமெரிக்கநாடான நிக்கரகுவா இந்த விவகாரங்களை விவாதத்துக்கெடுத்துக் கொள்ளும்படி ஐ. நா.வை முன்னர் கேட்டிருந்தது. இக்கோரிக்கைக்கு ஆதரவாக பல நாடுகள் வாக்களித்தன. ஆயினும் அமெரிக்கா அதன் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி இக்கோரிக்கையை நிராகரித்தது.

இதையடுத்து கிரனடா நிலவரம் குறித்து பல புதியஅறிக்கைகள் ஐ. நா. வில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக்கைகளை நன்கு ஆராய்ந்த பின்னரே கிரனடா விவகாரத்தை விதாதத்துக்கு விடுவதென்று ஐ. நா. முடிவு செய்தது.

ஐ. நா. இந்த முடிவைஎடுப்பதற்குஉறுப்புநாடுகளிடையே வாக்கெடுப்புகள் எதனையும் இம்முறை நடத்தவில்லை.

இதேவேளை கிரனடாவின் மகாதேசாதிபதி கிரனடாவில் அரசியல், சமூக நிலைகள் வழமைக்குத் திரும்பும் வரையும், சமாதானம் ஏற்படும் வரையும் அங்கு அமெரிக்கப் படைகள் இருந்துதான் ஆகவேண்டுமென்று உறுதியாகக் கூறியுள்ளார். (கி

# பர்மா வடகொரியா

## ராஜதந்திர உறவில் முறிவு!

ரங்கூன், நவ. 5

பர்மா வடகொரியாவுடன் ராஜதந்திர உறவுகளை நேற்றுடன் துண்டித்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து ரங்கூனில் இருக்கும் வட கொரிய ராஜதந்திரிகளையும் நாற்பத்தெட்டு மணித்தியாலத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி பர்மிய அரசு பணித்தது.

கடந்த மாதம் ரங்கூனில் இடம்பெற்ற பயங்கர குண்டு வெடிப்பில் நான்கு தென் கொரிய அமைச்சர்கள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர். இப்பயங்கரச் சம்பவத்துக்கு வட கொரியாவே பொறுப்பாகுமென்றும், தென் கொரிய ஜனதிபதி திரு. சுண்டு ஹூவானைக் கொலை செய்யவே அக்குண்டுவெடிப்பு இடம் பெற்றதென்றும் காரணம் காட்டியே பர்மா வடகொரியாவுடன் ராஜதந்திர உறவுகளைத் துண்டித்தது.

பர்மாவின் இந்த நடவடிக்கையை தென். கொரிய அரசாங்கம் பாராட்டி வரவேற்றுள்ளது. இதேவேளை அமெரிக்காவும் வடகொரிய அரசு மீது ரங்கூன் குண்டுவெடிப்பு சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சு உயர் அதிகாரி திரு. ஜோன் ஹியூஸ் இதனைத் தெரிவித்தார். (கி)

# வேலித்தகராறு பலத்த காயம்!

(மாவிட்டபுரம்)

வேலிப் பிரச்னை தொடர்பாக மூண்ட தகராறில் நபர் ஒருவர் தலையில் பலத்த வெட்டுக் காயத்திற்குள்ளானர்.

இளவாலை போயிட்டி என்னுமிடத்தில் நடந்த இச்சம்பவத்தில் சூசைப்பிள்ளை கைத்தாம்பிள்ளை என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் செல்லக்கண்டு மனோகரனை காங்கேசன் துறைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். (கு)

# நோபல் பரிசு பெற்ற தமிழர்!

(லண்டன்)

விஞ்ஞான துறைக்கு இவ்வாண்டு வழங்கப்பட்ட நோபல் பரிசு மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது. பௌதீகத் துறைக்கு தமிழரான சுப்பிரமணியம் சந்திரசேகருக்கும், அமெரிக்கரான வில்லியம் ஏ. பௌலருக்கும் வழங்கப்பட்டுள்ளது, இரசாயன துறைக்கு, ஸ்ரன் மேட் கென்றி ரவ்வுக்காரும், சுப்பிரமணியம் சந்திரசேகர், நட்சத்திரங்கள் பற்றி நடாத்திய ஆய்வுக்கே இதுகிடைத்துள்ளது. இவர் நோபல்பரிசு பெற்ற இரண்டாவது தமிழராகும். இவரது ஒன்றுவிட்ட சகோதரர் சி. வி. ராமன், 1930ம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற முதல் தமிழராகும். சந்திரசேகரர் தமது 19 வயதில் ஆராய்ச்சியை மேற்கொண்டார். தற்போது அவருக்கு 73வயதாகிறது. இவரது பிறந்ததினமான செப்டம்பர் 19ந் திகதி இப்பரிசுக்கான தொகை 193, 000 அமெரிக்க டொலர்களாகும். (கெ)

## விடுதலையான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளிடம் ஒப்படைத்தனர். 3-30மணியளவில் யாழ்.சிறைச்சாலையை வந்தடைந்த டாக்டர், 4 மணியளவில் யாழ். மெயின் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்.

## அகதிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதியை வழங்கினர்.

குறித்த அகதிகள் நிதிக்கு மேலும் பல கூட்டுறவுச் சங்கங்கள் உதவ இருக்கின்றன என்றும் அவர்கள் பணத்தை அனுப்பியதும் அகதிகள் நிதிக்குழுவிடம் வழங்கப்படுமென்றும் திரு' சிவமகாராசா தெரிவித்தார்.

அகதிகள் புனர்வாழ்வுத் தலைவர் டாக்டர் வி. ரி. பசுபதி, கூட்டுறவுச் சங்கங்கள், அகதிகள் புனர்வாழ்வு நிதியத்துக்கு நிதி அன்பளிப்புச் செய்தமைக்கு நன்றி தெரிவித்தார். (மா)

## இந்திராவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கவிருந்தது! ஆயினும், அரசின் வேண்டுகோளை அடுத்து அவர் விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இப்போது மீண்டும் இன்று இங்கு வரும் பார்த்தசாரதி, மூன்று நாள் தங்கியிருந்து பேச்சுவார்த்தை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பேச்சுவார்த்தைக்கான காலம் நீடிக்கவேண்டிய அவசியம் ஏற்படும்பட்சத்தில் அவர் மேலும் சில தினங்களுக்கு இங்கு தங்குவார்.

இலங்கைத் தமிழ்த் தலைவர்களுடன், குறிப்பாகத் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களுடன் அரசின் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே பார்த்தசாரதியின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் இங்கு திரும்பிவரும்போது, அவர்மீது விசாரணை நடாத்தப்படும் என்ற நிலையைக் கைவிட்டு, அமிர்தலிங்கம் உட்பட முக்கிய கூட்டணித் தலைவர்களை அழைத்து அரசுத்தலைவர்கள் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தவேண்டுமென்ற ஒரு நிலையை பார்த்தசாரதி இந்த விஜயத்தின் போது உருவாக்குவார் என்று நம்பகமாகத்தெரிகிறது.

## சீன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் அமெரிக்க ஜனதிபதியின் விசேட பிரதிநிதி வோர்ணல் கோடர்ஸு மாலைதீவு செல்லும் வழியில் இலங்கை வருகிருர். ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இவர்முக்கியவிடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவாரெனத் தெரிகிறது.

கடந்த மாதம் இலங்கை வந்திருந்த அமெரிக்க பாதுகாப்பமைச்சர் திரு. வெயின் பேகருடன் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்தே இவர்கள் பேச்சு இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (சூ)

### கல்வயல் கொலை, கொள்ளைவழக்கு

# விசாரணை நடுவில் 5-ம் எதிரி விடுதலை!

(யாழ்ப்பாணம்)

கல்வயல் கொலை கொள்ளை வழக்கில் விசாரணை நடுவில் 5-ம் எதிரி சு. சிவபாலன் விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். அனந்தகுமாரசாமி முன்னிலை விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

5-ம் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகளை அரச சட்டத்தரணி கே. வி. எஸ் ஸ்ரீகாந்தகுமார் வாபஸ்பெற்றதைத் தொடர்ந்து, அவர் நீதிபதியால் விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கில் 1975 ஜூன் 29-ம் திகதி கல்வயலைச்சேர்ந்த சிதம்பரப்பிள்ளை என்பவரை கொலைசெய்ததாகவும், அவரது மனைவி இராசம்மாவின் 450 ரூபா ரொக்கப் பணத்தையும், 3200 ரூபா பெறுமதியான நகைமைகளையும் கொள்ளையடித்ததாகவும், இவற்றிக்குச் சதிசெய்ததாகவும், சி. தங்கேஸ்வரன், கு. சிவபாதப, க. கந்தசாமி, ச. மாணிக்கசிவம், சு.சிவபாலன், சு. நகுலேந்திரன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 3-ம், 6-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும், 2-ம் 5-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் 4-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி திருமதி குலநாயகி ரட்ணபாலனும் ஆஜரானர்கள், அரசதரப்பில் அரச சட்டத்தரணி கே. வி. எஸ். ஸ்ரீகாந்தகுமார் ஆஜரானர்.

விசாரணை நடைபெறுகிறது. (க)

### காங்கேசன் லங்கா சீமெந்து ஆலைக்கு

# உயர் சக்தி மின்நிலையம் அமைக்கும் வேலை துரிதம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன் லங்கா சீமந்து லிமிட்டெட் சீமந்து ஆலைக்கான மின் விநியோகம் மீண்டும் தடைப்பட்டுள்ளதால் இந்த ஆலைக்கென புதிய உயர்சக்தி உப மின் நிலையத்தை அமைக்கும் வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை லங்கா சீமந்து லிமிட்டெட்டின் சீமந்து ஆலையின் அமைப்பு வேலைகள் பூர்த்தியான போதும் அதனை இயக்க மின்சாரம் போதாமல் இருந்து வந்தது.

இதையடுத்து இலங்கை உரதயாரிப்பு கூட்டுத்தாபனத்தின் சபுகஸ்கந்தையிலுள்ள ஜெனரேட்டரிலிருந்து மின்சாரத்தைப் பெற்று இந்த ஆலைக்கு விநியோகிக்க மின்சாரசபை சம்மதித்தமையால் கடந்த சில வாரங்களாக இந்த மின்சாரத்தைப் பெற்று மேற்படி ஆலை இயங்கிவந்தது.

ஆனல் உரத்தயாரிப்பு கூட்டுத்தாபனத்தின் ஜெனரேட்டரில் பழுதுஏற்பட்டுள்ளதால் இந்த மின்விநியோகமும் தற்போது தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மேற்படி ஆலை இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் இங்குவேலைசெய்த தொழிலாளர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், ஆலைஇயங்கத்தொடங்கியதும் அவர்களுக்கு வேலை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரமச்சாரி மரணம்! மோதிய வாகனம் மறைவு!!

(யாழ்ப்பாணம்)

வீட்டுவாசலில் நின்ற 67 வயது பிரமச்சாரியை வாகனம் ஒன்று மோதிவிட்டுச் சென்றதால், அவர் மரணமானர்; விபத்துக்குள்ளாகிய அந்த வாகனம் தலைமறைவாகிவிட்டது!

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த பொன்னையா இராசையா என்பவரே மரணமானவராவார்.

தினசரி வீட்டுவாசலில் நிற்பவர், சம்பவதினமான கடந்த முதலாம் திகதி இரவு 9 மணியளவில் நின்ருராம்.

முனகல் சத்தம் கேட்டு, அவுரது சகோதரியின் மகளும்; மருமகனும் வெளியில் வந்து பார்த்தபொழுதுசுயநினைவற்ற நிலையில் அவர் கிடந்தாரென்றும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நினைவிழந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு மரணமானரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸ் போக்குவரத்துப்பிரிவு கான்ஸ்டபிள் கே. ஜபார் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை செய்த பின்னர் விபத்து மரணமென தீர்ப்பளித்து. விபத்துக்குள்ளாக்கியவாகனத்தைக் கண்டுபிடிக்குமாறு உத்தரவிட்டார்.

பொலிசார் தலைமறைவாகிய வாகனத்தைத் தேடிவருகின்றனர். (மா)

## டில்லி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா செல்கிருர்! அப்போது இந்திராவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாக இரு நாட்டுச் சிறப்புப் பிரதிநிதிகளே இதுவரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வந்துள்ளனர். இவைகள் ல்தாடர்பாக இருநாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடாத்துவார்கள் என நம்பப்படுகிறது. 22ம் திகதி இருநாட்டுத் தலைவர்களும் பேசுவார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.